Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T' Phone: 23794

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில்செய்து கொடுக்கப்படும்.

சுடர்: 4 சுக்கில ஞூ வைகாசி மீ 29 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஃதா பிறை 6 (11 · 06 · 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 158

## பதிவு செய்யப்படாமல் இயங்கும்

# தனியார் ரியூட்டறிகள் மீது கட்டுப்பாடு விதிக்க முடிவு!

## விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 11

நாட்டில் உள்ள சகல தனியார் கல்வி நிலையங்கள், ரியூட்டறிகள் மீது- குறிப்பாக பதிவு செய்யப்படாமல் இயங்கும் ரியூட்டறிகள் மீது- கட்டுப்பாடுகளை விதிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

இதற்காக நாட்டில் உள்ள சகல தனியார் ரியூட்டறிகள் பற்றிய விவரங்களையும் கல்வித் திணைக்களம் மூலம் அரசாங்கம் திரட்டி வருகிறது.

யாழ் மாவட்டத்திலேயே அதிக தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன. அதனால் அது பற்றிய விவரங்களைத் திரட்டுவது யாழ் கல்வித் திணைக்களத்துக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அறியவருகிறது.

அனேகமாக ஏனைய மாவட்டங்களில் இருந்து தனியார் ரியூட்டறிகள் பற்றிய விவரங்கள் கல்வி அமைச்சுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிய வருகிறது

இந்த விவரங்களை வைத்து சகல தனியார் கல்வி நிலையங்கள் மீதும் கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி நிலையங்கள் மீதே கூடுதலான கண்காணிப்பு நடத்த இருப்பதாக அறிய வருகிறது.

கடந்த காலத்தில் சீர்குலைந்திருந்த சிவில் நிர்வாகத்தை காரணம் காட்டி தனியார் கல்வி நிலையங்கள் பதிவு செய்யப்படாமலும், வரி ஏதும் செலுத்தாமலும் இயங்கி வருகின்றன.

பதிவு செய்யப்படாத எந்த தனியார் கல்வி நிறுவனமும் கல்வி கற்போரிடமிருந்து, பணம் பெற்று ரசீது வழங்க முடியாது.

இந்த நடைமுறைக்கிணங்கவே கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதன்படி முதலில் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும், அதன் பின்னரே பணம் அறிவிட முடியும் என்ற பணிப்புரை விடுக்கப்பட உள்ளது.

பதிவு செய்த, பதிவு செய்யாத தனியார் கல்வி நிறுவனங்களிடமிருந்து உரியவரியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

## செய்திச் சாரம்

### காரைநகரில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

காரைநகர் மேற்குப் பகுதியில் நேற்று தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

தேடுதலை அடுத்து இந்தப் பகுதியில் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்தன. ஆயினும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை கசூரினா பீச்சில் நேற்று அமைதிப் படையினர் மினி முகாம் ஒன்றை அமைத்திருந்தனர். பீச்சுக்குள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (ஒ-9)

### மந்திகையில் இளைஞர் பலி!

வல்வெட்டித்துறை, ஜூன் 11

மந்திகை சந்தி பஸ் நிலையத்துக்கு முன்பாக இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை 9.45 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இறந்தவர் துன்னாலை தெற்கைச் சேர்ந்த வீரன் ஸ்ரீஸ்கந்தராசா (வயது 34) என அடையாளம் காணப்பட்டது. (உ-160)

### மாத்தளையில் தமிழ் இளைஞர் கைது!

மாத்தளை மாவட்டத்தில் தீவிரவாதச் செயல்கள் தொடர்பாக தமிழ் இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதத்தில் கரஹத்தன என்னுமிடத்தில் நிலக்கண்ணி வெடித் தாக்குதல் சம்பவம் ஒன்றில் 3 சிப்பாய்களும் ஒரு சிவிலியனும் கொல்லப்பட்டனர் அல்லவா!

அச்சம்பவம் தொடர்பாகவே இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். (ஒ-எ)

### துன்னாலையில் இளைஞர் சடலம்

கரவெட்டி பிராமணங்கோட்டம் என்னும் இடத்தில் நேற்றுக்காலை ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பிணமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

கொலையுண்டவர் துன்னாலையைச் சேர்ந்தவர் எனவும் 22 வயதானவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு துன்னாலை வெலிக்கன் தோட்டம்பகுதியில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட சமயம் இவர் பிடிபட்டதாகக் கூறப்பட்டது. (ஒ-70)

### கச்சாய் வீதியில் குண்டுத் தாக்கு

சாவகச்சேரிஜூன் 11

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகலில் சாவகச்சேரி, கச்சாய் வீதியில் குண்டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்றது.

ரோந்தில் ஈடுபட்ட வாகனம் ஒன்றின் மீதே பிற்பகல் 6-30 மணியளவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாம். இரவு சுமார் 7-30 மணியளவில் ஹெலி ஒன்றும் இப்பகுதியில் சுற்றி வட்டமிட்டது.

நேற்று இந்தப் பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டன. சங்கத்தானை முதல் சாவகச்சேரி வரை வீதிதடைசெய்யப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-9-31)

### பிரெஞ்சுக் குழு மீண்டும் வடமராட்சிக்கு

வடமராட்சி, ஜூன் 11

பிரெஞ்சு வைத்தியக் குழு மீண்டும் வடமராட்சிக்கு வருகை தரவுள்ளது.

பிரஸ்தாப வைத்தியக் குழு முன்னர் மந்திகை வைத்திய சாலைக்கு விஜயம் செய்து கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்திச் சென்றது தெரிந்ததே.

சம்பந்தப்பட்ட வைத்தியக் குழு முன்னர் சிகிச்சையளித்த நோயாளருக்கு இம்முறை சத்திர சிகிச்சை செய்யும். (ஒ-160)

### கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 11

வீடு திரும்புவதற்காக பஸ் நிலையத்தில் காத்துநின்ற பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் திடீரென்று அங்கு வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்த கான்ஸ்டபிள் குலசூரியா பண்டாரவளைப் பொலீசைச் சேர்ந்தவர் (ஒ-எ)

### மட்டக்களப்பில் கடந்த மாதம் 23 கொலைகள்!

மட்டக்களப்பு, ஜூன் 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மாதத்தில் மட்டும் 23 கொலைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் இரண்டு கத்திக்குத்து கொலைகள் ஆகும். ஏனையவை துப்பாக்கிச் சூட்டின் மூலம் ஏற்பட்டவை. (இ-21)

### மட்டுவிலில் வேலிக்கு வந்த கஷ்டம்!

சாவகச்சேரி, ஜூன் 11

சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் வியாழன், வெள்ளிக்கிழமைகளிலும் அமைதிப்படையினரின் ரோந்து நடவடிக்கை இடம்பெற்றது.

மட்டுவில் வடக்கில் வைத்தியசாலை வீதி, வாசிகசாலை வீதி ஆகியவற்றிலும் மூன்று அடி உயர மட்டத்திற்கு வேலிகளை வெட்டும்படி கூறப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது. (ஒ-31)

### ஊர்காவற்றுறையில் புதிய முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பில் அமைதிப்படையினர், புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். (ஒ)

### முதுமாணி பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முதுமாணிப் பட்டத்தை வரலாற்றுத்துறையில் திரு. பி. புஷ்பரத்தினம் பெறுகிறார்.

இவர்முதுமாணி (வரலாறு) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாக உபவேந்தர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். (க)

### புளியங்குளத்தில் ஒருவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 11

நேற்று புளியங்குளம் பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது பெயர் விவரம் தெரிய வரவில்லை.

இவரது சடலம் புளியங்குளம் சந்திக்கு அண்மையில் உள்ள தந்திக் கம்பம் ஒன்றின் அருகில் கிடக்கக் காணப்பட்டது. (உ-9)

## நயினாதீவு உற்சவம்: விசேட பஸ்கள் சேவையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை நயினாதீவுக்கு விசேட பஸ் சேவைகளை ஒழுங்கு செய்துள்ளது.

உற்சவ காலத்தை முன்னிட்டு பத்துக்கு மேற்பட்ட பஸ்கள் நயினாதீவுக்குச் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன.

வழமையாக ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது அரை மணி நேரத்திற்கு ஒரு தடவை பஸ் சேவை நடைபெறுகின்றது.

உற்சவ இறுதி நாட்களை முன்னிட்டு அடுத்த சில தினங்களில் இந்த பஸ்சேவை மேலும் அதிகரிக்கப்படும் என வ. பி. போ. சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-9)

### கிழக்கிலும் இந்திய பஸ் சேவை நிறுத்தம்

மட்டக்களப்பு ஜூன் 11

மட்டக்களப்பு —அம்பாறை மாவட்டங்களில் இந்திய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இ. போ. ச. பஸ்கள் சேவையிலீடுபடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கருதி இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

### முச்சந்தி முரளி



வடக்கு-கிழக்கு என்டால் எல்லாத்திலும் கடும் பிடிபிடிக்கலாம் என்டுதான் இஞ்சை இருக்கிற ரியூட்டரிகளைத் தேடி வேட்டை நடத்தப் போயினமோ...?

### சுபநேரம்

சுபநேரம்:
08.52 முதல் 10.22 வரை
ராகுகாலம்:
04.22 முதல் 05.52 வரை

## இந்தியப் படை வாபஸ்: ரெலோவின் நிலைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

இந்தியப்படை வாபஸ் குறித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக ரெலோ யாழ்.பிராந்திய தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்படத்தான் வேண்டும். ஆனால் இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களுக்குரிய சகல அதிகாரங்களையும் நடைமுறைப் படுத்தும்வரை அவர்கள் வெளியேறக்கூடாது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளை முன்வைத்து, அமைதிப்படையினரை வெளியேற்றுமாறு குரல்கொடுக்கப் படுகிறது.

இதனைத் தமிழ், முஸ்லிம் மக்கள் நன்குணர்ந்து, எமது பிளவுகளைத் தீர்த்து ஒற்றுமையை நிலைநாட்டவேண்டும்; எமது உரிமைகள் நிலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## விசேட அதிரடிப் படை முகாம்கள் விஸ்தரிப்பு?

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படை முகாம்கள் விரிவுபடுத்தப்படவுள்ளன என்று தெரியவருகிறது.

இம்முகாம்களிலுள்ள ஸ்ரீலங்கா படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் பதினொரு ஸ்ரீலங்காப் படை முகாம்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-21)

### மண்டேலா விடுதலையாகும் வாய்ப்பு

கேப்டவுண், ஜூன் 11

தென் ஆபிரிக்க கறுப்பு இனத் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (அ-எ)

### பஸ் சேவை வழமைபோல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்- பருத்தித்துறை பஸ் சேவைகள் நேற்று வழமை போல் நடைபெற்றன. [ஒ]

## கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கொடி எரிப்பு!

கொழும்பு, ஜூன் 11

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை (நேற்று முன்தினம்) நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது இந்திய தேசியக் கொடி எரிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. இந்திய ஏகாதிபத்தியத்தைப் பிரதிபலிப்பதாக உருவகிக்கப்பட்ட கொடும்பாவி ஒன்றும் எரிக்கப்பட்டது.

இந்தியக் கொடியை பௌத்த பிக்கு ஒருவர் முதலில் துண்டு துண்டாகக் கிழித்தார். பின்னர் அத் துண்டுகள் எல்லாம் எரிக்கப்பட்டன.

தேச பக்த பொது முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களும் பிக்குகளும் கலந்துகொண்டனர்.

## மாணவர் உயிருக்கு அதிபர்கள், நிர்வாகிகள் உத்தரவாதம் அளிக்க வேண்டும்

### பாடசாலை மாணவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 11

''மாணவர்களுக்கு எதிரான தாக்குதல், சித்திரவதை சம்பவங்களும் மாணவர்கள்சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இச்செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு கல்வியுடன் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் உடனடி நடவடிக்கையில் இறங்கி, மாணவர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அதுவரைக்கும் நாளை 12ஆம் திகதி முதல் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பனவற்றைப் பகிஷ்கரிக்க வேண்டும்'' — இப்படிக் கோரும் முயற்சி ஒன்றில் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்று இறங்கியிருக்கிறது.

இது தொடர்பான அறிக்கை ஒன்று மேற்படி மாணவர்களினால் நேற்று உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

## குழப்பம் செய்ய முனைவோ மீது கடும் நடவடிக்கை

### பொலீஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 11

ஆட்சேபம் தெரிவிப்பது என்ற போர்வையில் குழப்பத்தை உருவாக்க முயற்சிப்போர், முனைவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆட்சேபம் அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பது என்ற போர்வையில் கொள்ளையடித்தல், சூறையாடுதல், வீடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தல் ஆகிய குற்றச் செயல்களில் பலர் ஈடுபடுவதாகப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

ஆகையால் ஆட்சேபம் தெரிவிக்கவென்று ஆள் திரட்ட வருவோர் குறித்து பொலீஸாருக்குத் தகவல் தருமாறு பொலீஸார் பொதுமக்களைக் கேட்டிருக்கிறார்கள்.

எந்தச் சாட்டை வைத்தும் குற்றச் செயல் புரிவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## 400 மாணவர் தலைவர்கள் நேற்று சீனாவில் கைது

பீகிங், ஜூன் 11

கிளர்ச்சி நடத்திய மாணவர்களைத் தேடிக் கைது செய்யும் வேட்டையில் சீன இராணுவம் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நான்ஜிங் மற்றும் ஷாங்காய் நகரங்களில் இது வரை 400 மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாணவர் தலைவர்கள் துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக இராணுவ அலுவலகங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாணவர்கள் விலங்கிடப்பட்ட நிலையில், துப்பாக்கி முனையில் அவர்களிடம் இருந்து வாக்கு மூலங்கள் பதியப்பட்டன.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் படையினரால் தாக்கப்பட்டு, சோர்வுற்ற நிலையிலும் தூக்கிச் செல்லப்பட்டதைக் காண முடிந்தது.

இளைய தலைமுறையின் இதயம் வருடும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நாவற்குழியில் பண்படுத்தப்பட்ட 22 பரப்பு வயல் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: செல்வராஜா, 426 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (11221)

புத்தம் புதிய வீடியோ கமெரா Panasonic S-VHS Movie N.V-MSI Hitachi VK-C870E J.V.CGZ-S5 ஆகிய மொடல்கள் விற்பனைக்கு உண்டு. கே.கே. எலக்ரோனிக்ஸ், 27, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/2812)

7 மாதம் நிரம்பிய முட்டை இடும் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 117, வெப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (11193)

நல்லநிலையில் உள்ள சாவி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 521 (191) பருத்தித்துறை வீதி, நல்லூர். 11211)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [756]

இறக்குமதியாக இருக்கும் [Holland Ornk] விதை உருளைக்கிழங்குதேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். [753]

### SAAIRAAM

பாவித்த அலுமாரி சாப்பாட்டுமேசை செற்றி Honda C 90 Cycles T. V. Rice Cookers National 5030பு ய தளபாடங்கள் 10 ./· சழிவு விலையில் SaaiRaam 3ஆம் கட்டை பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. [11218]

### புறொயிலர் குஞ்சு விநியோகம்

Bairaha Farm புறொயிலர் குஞ்சு 15ஆம் திகதி வியாழக்கிழமை Christombu Farm பிறவுண் சேவற் குஞ்சுகள் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [755]

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler பேட்டுக் கோழி, சேவல், சூப்குஞ்சு, விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பரப் பலகை உண்டு. Nallur Farm Centre, 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/2797)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இல; 155, 2 ஆம் குறுக்குத்தெருவில் 2 பரப்பு கொண்ட காணியில் உள்ள வீடும் அருகிலுள்ள 1 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. 25/7 மணிக்கூட்டு வீதி, (B. M. C. ஒழுங்கை) யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவும். (746)

### Service

English Tamil Typewriting and sworn Translation work by experienced person undertaken at Address No. 54/2 St. Annes view Lane, Chundikuli, Jaffna. Call between 7. a, m and 4. p. m Drafting also done. [757]

### தேவை

வைமன் ரேட்டில் உள்ள கடை ஒன்றிற்கு அனுபவம் உள்ள பெண்பிள்ளை தேவை. விவரங்களுக்கு நேரில் வரவும். வைமன்ரேட், நல்லூர், யாழ்ப்பாணம். [754]

### மணமகன் தேவை

யாழ். இந்து உயர் குலத்தைச் சேர்ந்த A/L படித்த பெண்ணுக்கு நல்ல பதவியிலுள்ள நற்பண்புள்ள சைவ போசனமான 27 வயதிற்கு மேற்பட்ட மணமகன்தேவை சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். No. 71, C/o உதயன் யாழ்ப்பாணம். (11217)

### மணமகள் தேவை

யாழ். உயர் இந்து வேளாள குல பொறியியலாளர் மணமகனுக்கு அழகிய படித்த, விரிவுரையாளர், கணக்காளர் அல்லது பொறியியலாளர் மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். மணப்பெண் 38 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். சாதகம், சீதன விபரத்துடன் விண்ணப்பிக்கவும். 540, C/o உதயன். [759)

யாழ் வேளாள குலத்தைச் சேர்ந்த London Auto Mobile Engineering சித்தியடைந்து கனடாவில் வேலை செய்யும் Citizen ship உடைய 36வயது மணமகனுக்கு அழகிய படித்த கிறிஸ்தவ மணமகள் தேவை. முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 70, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (11210)

### மணப்பெண்கள் தேவை

யாழ். வேளாள குற்றமுள்ள அரசாங்க பியோன் 24 வயதுக்கும் 34 வயது அரசாங்க கிளாக்குக்கும் பெரிய Business செய்யும் 34 வயதுக்கும் வணிக குல 28 வயது கடைச்சொந்தக்காரருக்கும் 32 வயதுள்ள கத்தோலிக்கஇரண்டு Accountant மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [11223]

### திருமணசேவை

பின்வரும் இடங்களுக்குச் ஏஜென்டுகள் தேவை. வெள்ளவத்தை, கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு Norway, Canada. France, West Germany, U. K., Mangala, Agency, Koiyathoddam, Jaffna, Srilanka. [11222]

### காணவில்லை

பொமனேறியன் ஆண். இரண்டு வயது. சிகப்புநிறம், வாயில் கறுப்பு, நல்ல சடை. 8ஆம் திகதி முதல் காணவில்லை. கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு 500/- சன்மானம் வழங்கப்படும். பிடித்தவர்கள் அல்லது வைத்திருப்பவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்: 249, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். [760]

### இசை வகுப்புக்கள்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அருகாமையில் ஒகஸ், விற்றுர் பயிற்சி வகுப்புக்கள் ஆசிரியர் திரு. கண்ணன் அவர்களால் புதன், ஞாயிறு தினங்களில் மாலை 2-6 மணிவரை பயிற்றுவிக்கப்படுகின்றன. [741]

### Spoken English

புதியபிரிவு ஆரம்பம் 15-6-89 செவ்வாய், வியாழன் நாட்களில். நேரம் பிற்பகல் 3.30 - 5.00 S.B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [11224]

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்; Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2833]

### தட்டச்சு இயந்திரங்கள்

Typewriters பழைய புதிய தமிழ், ஆங்கில தட்டச்சு யந்திரங்கள் தேவை. திருத்தியும் கொடுக்கப்படும். Fudo நிறுவனம், மின்சார நிலைய வீதி, 39/17, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2832]

ஓம் சக்தி!

இரோக்க கப்பல்களில்

## ★ வேலை வாய்ப்புகள் ★

(உடனடியாக)

AB BOSON    OILER FRESHERS (புதியவர்கள்)

மற்றும்: OFFICERS

RADIO OFFICER    ELECTRICIAN
IInd OFFICER    IIIrd ENGINEER

மற்றும்

✶ கனடா ✶ ஜேர்மன் ✶ பிரான்ஸ்
✶ இத்தாலி ✶ சுவிஸ்

ஆகிய நாடுகளுக்கான

✶ பிரயாண ஒழுங்குகள் ✶ பாஸ்போர்ட் ✶ பொன்ட்

ஆகியனவும் செய்து தரப்படும்.

"முற்பணம் அறவிடப்படமாட்டாது"

சந்திக்கும் நேரம்:-
காலை 6.00 மணி — 8.30 மணி
மாலை 3.30 மணி — 7.00 மணி

## சுஜிதா என்ரபிறைசஸ்

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி:

(சிறுப்பிட்டி முருகன்ஸ்ரோர்ஸில் விசாரிக்கவும்)

(பப்பன் டை)    [C/2569)

# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.

### ஆசிய அபிவிருத்தி வங்கி-கல்விப்புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989ஆம் ஆண்டு யூன் மாதம் 27ஆம் திகதி (27-06-1989) முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு, கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத்திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், சட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989ஆம் ஆண்டு யூன் மாதம் 23ஆம் திகதி (23-06-1989) பிற்பகல் 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக (ரூபா 50.00) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக (ரூபா 250.00) ரூபா இருநூற்றி ஐம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப்பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989ஆம் ஆண்டு யூன் மாதம் 27ஆம் திகதி (27-06-1989) மாலை 2.00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின் படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்கள் யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி தி, பெரியதம்பி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
09 — 06 — 1989.

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி. | இருமாடிக் கட்டிடம் 68' 9''/25'/0'' | 650,000.00 |
| 2. | யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி. | இருமாடிக் கட்டிடம் 137'6''/25' | 1,150,000.00 |
| 3. | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பா. பருத்தித்துறை. | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' விஞ்ஞான கூடம். | 1,600,000.00 |
| 4. | யா/தொண்டமானாறு வீரகத்தி, ம. வி. | பெருந்திருத்த வேலை 50'/25' மாடிக்கட்டிடம். | 150,000.00 |
| 5. | யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. | மூன்று மாடிக் கட்டிடம், 90'/25' | 1,600,000.00 |
| 6. | யா/வல்வை சிவகுரு வித்தி, வல்வெட்டித்துறை. | இருமாடிக் கட்டிடம் 48'9''/25' | 350,000.00 |
| 7. | யா/நெல்லியடி மெ. மி. த. க. பா. கரவெட்டி. | இருமாடிக் கட்டிடம் 68'9''/25' | 550,000.00 |
| 8. | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பா. பருத்தித்துறை. | பெருந்திருத்த வேலை. | 900,000.00 |
| 9. | யா/நெல்லியடி ம. ம. வி, கரவெட்டி. | பெருந்திருத்த வேலை. | 300,000.00 |
| 10. | யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை. | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' 1 | 1,500,000.00 |
| 11. | யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை. | மூன்றுமாடிக் கட்டிடம் 11 90'/25'' | 1,500,000.00 |

[சி., 2697]

## அனலைதீவு தையற் பயிற்சி நிலையத்திற்கு
## போதனாசிரியை தேவை

தையற் பயிற்சியளிக்க தகுதியுடையவர்களிடம் இருந்து இப்பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமது சொந்த விபரங்களுடன் தகுதிச் சான்றிதழின் பிரதியையும் இணைத்து 30-06-89க்கு முன் விண்ணப்பங்கள் செயலாளர், சமூக சேவா சங்கம், அனலைதீவு என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

செயலாளர்,
சமூக சேவா சங்கம்,
அனலைதீவு.

[902]

## 42 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. வி. எம். பஞ்சலிங்கம்

[யாழ். அரசாங்க அதிபர்]

தோற்றம்: 11 - 06 - 1934    மறைவு: 01 - 05 - 1989

மாசில்லா அன்பான முகம், மண்பார்த்த நடை, மனங்கோணாது மக்களுக்குச் சேவையாற்றும் பெருந்தன்மை, அடக்கமான சுபாவம். அமைதியான பண்பு, ஆழமான சிந்தனை, ஆற்றல் மிகு அறிவு இவை அனைத்தும் எம் கண்களை விட்டு நீங்காத நினைவுகள்!

"இன்னோரன்ன பிரச்சினைகளின் மத்தியிலே மக்களோடு மக்களாக நின்று முகம் கொடுத்து அவற்றை இலகு முறையில் பேசித்தீர்க்கும் தன்மை, தன்னலம் கருதாத சேவைமனப்பான்மை, ஊண் உறக்கம், உறவு நோக்காது கடமையாற்றுவதில் உள்ள கடமை உணர்ச்சி சொல்லிலும், செயலிலும் எளிமையோடு கூடிய நுண்மதியுடைமை, பட்டத்தால், பதவியால் உயர்ந்து நின்ற போதும் பணிவான தன்மையோடு பிறர்க்குதவும் மனப்பாங்கு இவை அனைத்தும் நிரம்பப் பெற்ற ஓர் உயர் பண்பாளன்"

'எங்கள் யாழ் அரச அதிபரை இழந்துவிட்டோம்' அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாம் என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்!

சாந்தி!

- ஊழியர்.

யாழ்ப்பாணம்.    [11226]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் குணநாயகம் சுஜந்தன்

(கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகாவித்தியாலய மாணவன்)

தோற்றம்: 15 - 12 - 1980    மறைவு: 06 - 07 - 1988

திதி: 11 — 06 — 1989

எங்கள் அன்புச் செல்வமே - சுஜந்தா!
எங்கு தான் ஐயா சென்றீர்?
எங்கள் எல்லோரையும் தவிக்க விட்டு
ஒரு நொடியில் பறந்து விட்டாய் ஐயா!
நீங்கள் எங்களை விட்டுச் சென்று ஓராண்டு சென்றதையா?
எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்
எங்கள் செல்வத்தை எங்களால் மறக்க முடியாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உற்றார், உறவினர்கள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.    [900]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் சிலேட் - பென்சில்

கொழும்பு ஜூன் 11

ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே சிலேட்டுக்களையும் (கற்பலகைகள்) சிலேட்டும் பென்சில்களையும் மீண்டும் பயன்படுத்தும்படி பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு கல்வி அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டா ஆலோசனை கூறியிருக்கிறார்:

இவை ஆரம்ப காலம் தொடக்கம் பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இப்போது இவை பாவிக்கப் படுவதில்லை.

இவற்றிற்கு பதிலாக தற்போது பென்சில், பேனு ஆகியன பயன்படுத்தப்படுவதனுல் பெற்ளேர் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றன.

இதனுல் மீண்டும் சிலேட்டுக்கள், சிலேட்டுப் பென்சில்களைப் பயன்படுத்துவது அவசியமாகிறது என்று அமைச்சர் தனது ஆலோசனையில் கூறியிருக்கிறார். (இ-எ)

## புலமைப் பரிசில் பரீட்சைகள் ஆகஸ்ட் 20 இல்

யாழ்ப்பாணம் ஜூன் 10

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. (உ-3)

# சைவக் குருமாரான ஆசிரியருக்கு விரும்பிய பாடசாலைகள் இல்லை

### சைவக் குருமார் அர்ச்சகர் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

இலங்கை அரசாங்கத்தின் ஒரு தீர்மானத்துக்கு, அமையப் பௌத்த குருமார்களும் மற்றைய மதகுருமார்களும் தாம் வதியும் இடத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் கல்வி போதிப்பதற்கு இடம் வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனுல் சைவ குருமார்களாக உள்ள ஆசிரியர்களுக்கு அவர்களுக்கு வசதியான இடத்தைக் கொடுக்காதது வேதனைக்குரியதாகும்.

இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் பேரவையின் செயலாளர் சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள் கல்வி அதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சகல மதகுருமார்கள், அர்ச்சகர்கள் ஆகியோருக்கு அவர்களின் இல்லங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் இடம் வழங்குவதே நீதியாகும்.

இப்படி அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட

## பாடசாலைகளிடையே சங்கீத - நடன - நாட்டிய போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில்சங்கீத, நடன, நாடக, நாட்டிய போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

கொத்தணி மட்டத்தில் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பும் கோட்ட மட்டத்தில் 25 ஆம் திகதிக்கு முன்பும் மாவட்ட மட்டத்தில் 29 ஆம் திகதிக்கு முன்பும் போட்டிகள் நடத்த வேண்டும் என்று கல்விப் பணிப்பாளர் செல்வி. இ. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டி இம்மாதம் 29 ஆம் திகதி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ - 3)



நிதித்துறையில் உங்கள் நண்பன்

★ ஷப்ரு ★

நம்பிக்கையுடன் சேமித்து
உங்கள் நிதியைப் பெருக்குங்கள் . . .

நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15 % |
| 6 மாதங்கள் | 15 % | 17 % |
| 12 மாதங்கள் | 18 % | 20 % |
| 24 மாதங்கள் | 21 % | 23 % |
| 36 — | 22 % | 24 % |




பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond ),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

நம்பிக்கை நாணயத்தின் சின்னம் - ஷப்ரு

SHABRA UNICO FINANCE LIMITED
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576,
ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்.
யாழ் முகவர்: 207. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆவது ஆண்டு நினைவு தினம்



மண்ணில்
29-10-1965

விண்ணில்
11-06-1987

### கந்தையா பாஸ்கரன்

பாஸ்கர்!
உன்னை எண்ணினல் கண்களில் கங்கையே!
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரிகள்.

உடுப்பிட்டி, (யூனியனடி) (872)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### நாகலிங்கம் அரிகரன்

தோற்றம்: 08-05-1967
மறைவு: 17-05-1986

திதி:11-6-1989

ஆற்றலும் அன்பும் அஞ்சா நெஞ்சும்
அமைந்த எம் மைந்த அரியே!
கூற்றுவன் நின்னை எங்கே
கொண்டு சென்றனன்?
தனது தேவ நாட்டு விடுதலைக்கோ
தலைமை தாங்க நின்னை அழைத்தனன்?
நாமோ நின்மறைவால் போக்கற்றோம்
புண்பட்டோம் எல்லாச் சுகமும் இழந்து
புலம்புகிறோம்.
எம்மை நீ தேற்றுவதற்கு
வாராயோ எம் செல்வமே!

உமது பிரிவால் துயருறும்.
அப்பா, அம்மா, தங்கை,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. [891)

## பிறந்த நாள் நினைவு



அவனியின் மடியில்:
11-06-1953

ஆண்டவன் அடியில்:
20-02-1989

20-02-1989 அன்று அகால மரணமடைந்த
### மரியாம்பிள்ளை தேவநாயகத்தின்
பிறந்தநாள் நினைவாக

அணையாத விளக்காய் இருப்பீர் - என்று
நம்பியிருந்தோம் உம்மை - ஆனல்
அதைப் பகற்கனவாக்கி விட்டார்கள்
அன்னையைக் கோவிலாக வணங்கினீர் - ஆனல்
என்னென்று உன் உயிர் பிரிந்ததையா -
உன் அம்மாவைப் பிரிய
34 வயதினில் உமது கடமையோ ஏராளம்
யாரையையா பொறுப்பாக விட்டீர் - தெய்வம்
தான் அறியாதோ நீர் செய்தவைகளை
எமக்கு இனி யாரையா இந்த உலகினில்
நீர் சென்ற இடம் எங்கையா? சொல்லையா?

இவரின் பிரிவால் வாடும்:
தாய், பேபி, கிறிஸ்ரோ, ராஜி,

பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம். (890)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு
# உள்நாட்டுக் குழப்பங்களால் மொத்த நஷ்டம் 22 கோடி ரூபா

கொழும்பு, ஜூன் 11

உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்பட்ட மொத்த நஷ்டம் 22 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கியினல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988 இல் இலங்கை ரயில் சேவை வருவாயிலும் 43 கோடி ரூபா வீழ்ச்சி ஏற்பட்டது.

பயணிகள் தொகையும், பண்டங்களின் தொகையும் குறைந்ததாலேயே இந்த வீழ்ச்சி ஏற்பட்டது.

மத்திய வங்கி அறிக்கை மேலும் கூறுவதாவது:

1988 ஆம் ஆண்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபைகளின் சேவை, தூரரீதியில் குறிப்பிடத்தக்களவு குறைந்தது.

ஒதே போன்று இலங்கைப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகளினல் நாளொன்றுக்குப் பாவிக்கப்பட்ட பஸ்களின் எண்ணிக்கையும் முந்திய ஆண்டிலும் பார்க்கக் குறைந்தது. 1987 ஆம் ஆண்டில் தினசரி சராசரியாக 4,676 பஸ்கள் ஓடின. 1988இல் இந்த எண்ணிக்கை 4,421 ஆகக் குறைந்தது.

இந்த வீழ்ச்சிக்கு உள்நாட்டுக் குழப்பங்களே பெருமளவுக்குக் காரணம் என்று அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கைப் பிரதேசபோக்குவரத்துச் சபைகளின் பஸ்களின் எண்ணிக்கையும் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பொழுதுள்ள பஸ்களில் 54 சதவீதம் பணிகளுக்கு ஏற்றவையல்ல.

குழப்பங்களில் சில புதிய பஸ்கள் உட்பட மொத்தமாக 609 பஸ்கள் அழிக்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன. இதனல் இலங்கையின் பிரதேச போக்குவரத்துச் சபைகளுக்கு ஏற்பட்ட மூலதன இழப்பு 6 கோடி 30 லட்சம் ரூபாவாக இருந்தது.

இவ்வாறு மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது. [ச]

## பிரதி திட்டமிடல் பணிப்பாளருக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழா

அரியாலை, ஜூன் 11

முன்னர் யாழ் உதவி அரச அதிபராகவிருந்து தற்போது யாழ் மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகச் சென்றுள்ளதிரு. கே, மாணிக்கவாசகரைக் கௌரவித்து கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தில் பாராட்டுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையமும். கலைச்சுடர் சனசமூக நிலையமும் இணைந்து மேற்படி கூட்டத்தை ஒழுங்கு செய்தன.

கொய்யாத்தோட்டம் சனசமூகநிலையத் தலைவரும் யாழ் மாநகரசனசமூக நிலையத்தலைவருமான திரு. கோ. தியாகராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

யாழ் உதவி அரச அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளைமங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

மாநகரசபை சனசமூக நிலைய மேற்பார்வையாளர் திரு. எஸ். யோகசிவம், யாழ் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. ஆ. இரகுநாதன்.கிராம சேவை அலுவலர் திரு. ம. சுந்தரலிங்கம், திருவாளர்கள்: இ. தவ. கோபால், சி.சி. வரதராஜா ஆகியோர்பாராட்டு உரை நிகழ்த்தினர்கள்,

தற்போதைய யாழ் உதவி அரச அதிபர் திரு கே. சபாபதிப்பிள்ளை சிறப்புரை நிகழ்த்தினர்.

திரு. மாணிக்கவாசகர் தம் மீதான பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்து பதிலுரை நிகழ்த்தினர்.

கலைச்சுடர் சனசமூக நிலையத் தலைவர் திரு ம, ரவீந்திரன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## யாழ். பல்கலைக்கழக அணியுடன் இன்று சென்றலேட்ஸ் மோதும்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ் பல்கலைக் கழக கிரிக்கெட் கோஷ்டிக்கும் சென்றலேட்ஸ்கிரிக்கெட்கோஷ்டிக்கும் இடையில் 50 ஓவர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி இன்று 11 ஆம் திகதி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (க)

## நோயாளிகளுக்கு உணவு இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 11

வேலணை கிராமியவைத்திய சாலையில் கடந்த சில மாதங்களாக உணவு வழங்கப்படாததால் நோயாளர்கள் பெரும் கஷ்டப்படுகிருர்கள் என அறிய வருகிறது.

இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்களுக்கு கடந்த சில மாதமாக உணவும், சுடுநீரும் வழங்கப்படவில்லை.

இதையிட்டு பொது அமைப்புகள் பிராந்திய சுகாதார பணிப்பாளருக்குப் புகார் செய்துள்ளார். [க-3]

## முஸ்லிம் மாகாணசபை வேண்டும்

மட்டக்களப்பு ஜூன் 11

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண ஒரேயொருவழி முஸ்லிம் மாகாணசபைதான்:

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனப் எம். எல். ஏ. ஹிஸ்புல்லாஹ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காத்தான்குடி ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கிளை உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்பில் அவர் மேலும் பேசுகையில்,

''கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ் - முஸ்லிம் மக்கள் பிரிந்து நின்று எதனையும் சாதிக்க முடியாது. இன ஐக்கியம் மூலம்தான் சாதிக்க முடியும்.

சில பிற்போக்கு எண்ணம் கொண்ட தீய சக்திகள் இரு சமூகங்களிடையே மோதலை தூண்டிவிடுகின்றன. இதற்கு நாம் ஒருபோதும் துணை போகக் கூடாது என்றார். (இ-21)

## 47 நாட்களின் பின் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூன் 11

மீன் வாங்க கடற்கரைக்குச் சென்ற இளம் குடும்பஸ்தரின் சடலம் 47 ஆம் நாள் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது.

இச் சம்பவம் அண்மையில் கதிரவெளி கிராமத்தில் நடைபெற்றது.

எஸ். ரவிச்சந்திரன் [22 வயது] என்பவரே மேற்படி நபராவர். [ஒ-21]

## புதிய அதிபர்

யாழ்ப்பாணம் ஜூன் 11

திருநெல்வேலிவிவசாய ஆராய்ச்சி நிலைய முன்னை நாள் பொறுப்பதிகாரியான திரு. தளையசிங்கம் குகதாசன் மருதனமடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

## 3 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
### திரு. குணரட்ணம் சிவபாதம்
(இலங்கை வங்கி உதவி முகாமையாளர்)

மலர்வு: 23-11-1936
உதிர்வு: 11-06-1986

துடுப்பிழந்த ஓடம் போல்
துணையிழந்து நாம் தவிக்க
காலங்கள் உருண்டோடி
வருடங்கள் மூன்றாகினவே!
உம் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை வேண்டி நிற்கும்

அம்மா, மனைவி
மக்கள், சகோதர,
சகோதரிகள்.

''குரு இல்லம்''
புலோலிகிழக்கு.
பருத்தித்துறை. (895)


## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Data Processing & Computer Programming Course**

புதிய பிரிவுகள்: 12-06-1989 (Mon - Fri)
10-06-1989 (Sat - Sun)

BASIC — 2½ MONTHS — 10.00 a.m — 11.30 a.m

**I st Payment Rs. 500/-**

IBM SUPER/XT, IBM COMPATIBLE உட்பட பல நவீன கம்பியூட்டர்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

★ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் ஆரம்பமாகும்.

**IDP COMPUTER CENTRE**

342, K. K. S. ROAD,
(சிவன் கோயில் அருகாமையில்)
Branch: 7th Mile Post K.K.S. Road, Mallakam.
(சி/2829)


## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### முருகேசு கிருஷ்ணபாலன்

தாயின் மடியில்: 25-03-1965
மாயவன் அடியில்: 11-12-1988

மாயவனின் பெயர் பெற்றாய்
மாய்த்து விட்டார் உன் உடலை
மாதம் ஆறு சென்றாலும்-
மாறாக் கவலை வாட்டுதப்பா!

அம்மா, உடன்பிறப்புக்கள்,
மச்சான், மச்சாள்மார்கள்,
பெறுமக்கள், மருமகன்,
உறவினர்கள், நண்பர்கள்.

இல. 7, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (11216)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திரு. ஆறுமுகம் பஞ்சலிங்கம்
(விற்பனைத்திணைக்கள ஊழியரும், பிரசைகள்குழு உறுப்பினரும்)

தோற்றம்: 05-03-1947
மறைவு: 02-05-1989

பருத்தித்துறை மண்ணில் பிறந்து
கிளிநொச்சி மண்ணில் மறைந்தாய்
பண்புள்ள தமிழன் — நீ
அன்புள்ள மக்கள் தொண்டன் — நீ
நாட்டுக்கு நீ செய்த சேவை
மறக்க முடியாதய்யா!

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் 15-6-89 அன்று எங்கள் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நினைவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள்.

''கனகபுரம்''
கிளிநொச்சி. (896)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பதிவாளர் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் 1989 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி வரை என்னல் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:
ரூ. 11,000 - 8x250 - 13,000 மாதமொன்றிற்கு

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூ. 20/- செலுத்தி இப்பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை / தபாற்கட்டளையை 23x10 ச.மீ அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நிபதிச் சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

● குறிப்பு: நியமனம் ஒப்பந்த அடிப்படையிலும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

— துணைவேந்தர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1989 - 04 - 28
[சி-2831]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீழ் தீர்த்த குறள்

சீத்தலைச் சாத்தனார் என்ற பழந் தமிழ்ப்புலவர் பாட்டு எழுதும்போது ஏதேனும் தப்பு ஏற்பட்டால் தன் தலையிலே எழுத்தாணியாலே குத்துவார் அப்படிக் குத்திக்குத்தி அவருடைய தலை முழுவதும் சீழ் வடியும் புண்ஏற்பட்டது. அதனாலேயே சீ த் த லை ச் (சீழ்+தலை) சாத்தனார் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது.

இப்புலவர் சீழ் தலையுடன் திருக்குறள் அரங்கேற்ற மாகிற சபைக்குப் போனார். வள்ளுவர் 1330 குறள் களையும் பாடி அரங்கேற்றம் செய்தபொழுது மெய் மறந்து கேட்டிருந் தார். அவருடைய தலையில் இருந்த புண்ணெல்லாம் சுத்தமாக ஆறி குணமாகிவிட்டன!

# கன்னித் தமிழைக் கண்போல் காத்திட்ட கத்தோலிக்கர்

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த'' தமிழை வளர்த்த பெருமை பல சமயத் தவர்க்கு உண்டு, பதினாறும் நூற்றாண்டு தொட்டு கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தினரும் அதில் பெரும் பங்கு கொண்டனர். டிநோபிலி, வீரமா முனிவர். மாயூரம் வேதநாயகம்பிள்ளை, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகள் போன்றோர் தமிழ்த்தாய்க்குச் சேவை செய்த தன்னிகரற்ற தனியர்.

தமிழர் மொழியை மட்டுமன்று, அவர்களுடைய பண்பாட்டுச் சிறப்புக்களையும் தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு அப்பால் எடுத்துக் கூறிய தமது மதத்தின் கொள்கைகளை எள்ளளவும் விட்டுக் கொடுக்க விரும்பாத கத்தோலிக்க மக்கள், தமிழ் மக்களுக்குத் தமிழ் மக்கள் என்ற மட்டில் பல தனிப்பட்ட சிறப்பான பழக்க வழக்க நடைமுறைகளும் இருக்க முடியும் என்பதை ஏற்கத் தயங்கினர்.

1962ஆம் ஆண்டு நடைபெறத் தொடங்கிய இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் விளைவாக கத்தோலிக்கர் தமக்கும் தமது பழம் பெரும் பண்பாட்டிற்கும் இருக்கும், உறவை இருக்க வேண்டிய உறவை மீண்டும் ஆய்வு செய்யத் தொடங்கினர். அதன் விளைவாக கத்தோலிக்க தமிழர்களின்

**- அருள் திரு. புலவர் நீ. மரியசேவியர் அடிகள் -**
( திருமறைக் கலாமன்ற இயக்குனர்)

பெருமையும் கத்தோலிக்க மக்களுக்கு உண்டு. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கணத்தையும் (தொன்னூல்) திருக்குறளையும் (அறம், பொருள்) லத்தின் மொழியில் அன்றைய கற்றோர் உலகிற்கு வெளியிட்ட வீரமா முனிவர் பரம்பரையில்தான் இன்றைய கற்றோர் உலகிற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மூலம் தமிழர் பண்பாட்டை அறிமுகம் செய்து வைத்தார் அடிகள் தனிநாயகம்.

கன்னித் தமிழைக் கண்ணே போல் காத்திட்ட கத்தோலிக்கர் மத்தியில், தமிழர் பண்பாட்டுடன் தொடர்புடைய ஒருசில பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் சிக்கல்களை எழுப்பின. காரணம், அவைகள் சைவசமயத்துடன்இணைக்கப்பட்டு சமய விளக்கங்கள் அளிக்கப்பட்டு வந்ததுதான்.

வழிபாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. தமிழ் மரபிற்கு ஏற்ப வழிபாட்டு அடையாளங்கள் அமைக்கப்பட்டன. வழிபாட்டுப் பாடல்களின் மொழியிலும் இசையிலும் தமிழ் மணம் கமழத் தொடங்கியது. தைப்பொங்கல் போன்ற தமிழர் திருவிழாக்கள் கத்தோலிக்கராலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன.

கடந்த இருபதாண்டு காலத்திலும் ஈழத்துக் கத்தோலிக்க மக்கள் கருத்தரங்குகளையும் பட்டிமன்றங்களையும் நடத்தி தமிழர் பண்பாட்டிற்கும் தமக்கும் உள்ள உறவை ஆய்வு செய்து வந்துள்ளனர். நாட்டின் சூழ்நிலை காரணமாய் நலிந்து போயிருந்த இத்தகைய ஆய்வரங்குகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன.


## வேலை வாய்ப்புக்கள்

## மத்திய கிழக்கு

A. சவூதி

| | |
|---|---|
| (1) வீட்டு வாகன ஓட்டுனர்கள் | ரூபா. 5400/- |
| (2) வீட்டுப் பணிப்பெண்கள் | ரூபா. 3600/ |

B. குவைத்

| | |
|---|---|
| (1) விமானநிலைய சுத்திகரிப்பாளர்கள் | ரூபா. 3480/- |
| (2) வீட்டுப் பணிப்பெண்கள் | ரூபா. 3480/- |
| (3) வாகன ஓட்டுனர்கள் | (a) ரூபா 4640/- |
| | (b) ரூபா. 3480/- |

C. பாஹ்றேன், டுபாய், அபுடாபி, சாஜா

| | |
|---|---|
| (1) வாகன ஓட்டுணர்கள் | (a) ரூபா. 4640/- |
| | (b) ரூபா. 3480/. |
| (2) வீட்டுப் பணிப்பெண்கள் | ரூபா. 3480/- |

D. பாஸ்போட் தேவைப்படுவோருக்கு செய்து கொடுக்க வசதிகள் உண்டு.

E. மற்றும் தகைமைகள், விபரங்கள் கீழ்க்காணும் விலாசங்கள் ஒன்றில் பெற்றுக் கொள்ளலாம்,

ந. சிவப்பிரகாசம்
இந்திரபாலாஸ் பார்மஸி,
108, K. K. S. வீதி,
சுன்னாகம்.

ந. சிவப்பிரகாசம்,
C/o. N. பாலா,
11A, மொம்சாக் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(892)


# அவசியமானால் மட்டுமே சத்திரசிகிச்சை செய்யப்படும்

## மக்கள் அதற்கு அஞ்சத் தேவை இல்லை

சத்திர சிகிச்சை அல்லது அறுவைச் சிகிச்சை என்பது சத்திரம் (கத்தி) உட்பட சில ஆயுதங்கள் மூலம் அளிக்கப்படும் சிகிச்சை ஆகும். எனினும் சத்திர சிகிச்சைத் துறையில் ஈடுபடுவோர் சகல நோயாளிகளிலும் சத்திரத்தைப் பாவிப்பதில்லை என்பது தெளிவாயிருக்க வேண்டும். தேவைப்பட்டால் மாத்திரம் இச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு உணர்வு அழியாமல், மிகக் கடினமான முறையில் புண்களை எரிப்பதும், முறிவுகளை சிராக்கி மட்டைகள் கட்டுவதும், மூளை வருத்தங்களுக்கு பேய் ஆவி (Spirit) தான் காரணம் எனும் நம்பிக்கையால், மண்டை ஓட்டில் துவாரங்கள் துளைப்பதும் நடைபெற்றதற்கும் அத்தாட்சிகள் இருக்கின்றன.

ஆதி காலத்தில், விஞ்ஞான முறையில், சிறந்த முறையில் சத்திர சிகிச்சை செய்த வைத்தியரென பெயர் பெற்றவர் இந்தியரான சுஸ்றுரா (Sus-ruta) காலம் செல்லக் குளோரோபோம் (Chloroform) முதலிய மருந்துகளால் உணர்வழித்து (Anaesthesia) சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது எனினும் மரண விகிதம் கூடிய விதத்தில் ஏற்பட்டது. பின்னர் உடலியல் Physiology பற்றியும் நோய்களைப்பற்றியும் (Pathology) (விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளால்) அறிவு வளரவும் இரத்த ஏற்றம், மயக்க வாயுக்கள், மருந்துகள். நுண்ணுயிர் எதிரிகள் முன்னேற்றம் அடையவும் சத்திர சிகிச்சை நல்ல முறையில் வளர்ந்து தற்பொழுது மிகப் பாதுகாப்பான முறையாக விளங்குகின்றது. ஒவ்வாமையைத் தடுக்கும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டதினால் மாற்று அங்கம் பொருத்துவதும் (Organ Transplantation) செயற்கைப்பகுதிகள் பொருத்துவதும் (உதாரணமாக, இருதய வால்வு (Heart Valve) சாத்தியமாகிவிட்டது.

### சத்திர சிகிச்சைக்கான காரணங்கள்

சத்திரசிகிச்சை எல்லோரிலும் மேற்கொள்ளப்படுவதில்லை. சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதற்குதகுந்த காரணங்கள் உண்டா? எனத் தீர்மானிக்கப்படும். இக் காரணங்களில் சில;-

[அ] குறிப்பிட்ட நோய் வேறு முறைகளால் மாற்ற முடியாதது. உதாரணம்; குடலிறக்கம் [Hernia].

(ஆ) மருந்துச்சிகிச்சையால் குணம் கிடைக்கவில்லை. உதாரணம்; இரப்பைப் புண் [Gastric ulcer]

(இ) நீடிய காலம்மருந்துச் சிகிச்சைஅளிக்க வேண்டியிருந்தாலும் இதன் பக்க விளைவுகள் பாதிப்பை ஏற்படுத்துமென்றாலும் உதாரணம்; கேடய தொட்சிவாதைThyro toxicosis)

[ஈ] நீடியகால மருந்துச் சிகிச்சையை மேற்கொள்ள நோயாளி தயங்கல், தகுதியற்றவர் (Non -Compliance)

> யாழ்ப்பாணத்தில் உள்ள தலை சிறந்தசத்திர சிகிச்சை நிபுணர்களில்ஒருவர் 'உதயனுக்கு இச்சிறப்புக் கட்டுரையை எழுதியுள்ளார்.

[உ] நோயைக் கண்டுபிடிப்பதற்கு சில முறைகள் உதாரணம்; சிறு துண்டு வெட்டி எடுத்தல் (Biopsy).

எனவே மக்கள் தமக்கு ஏன் சத்திர சிகிச்சை, மருந்தால் குணப்படுத்த முடியாதா என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை.

உண்மையில் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரின் திறமை அறுவையில் (Operation) மாத்திரமல்ல, நோயாளிக்கு சத்திர சிகிச்சை [அ] வேண்டுமா (Whether to operate) [ஆ] எப்பொழுது When to operate), [இ] எவ்வளவு (How much to operate) எனும் தீர்மானங்களிலும் தங் யிருக்கிறது.

சத்திர சிகிச்சை, நோயைக் குணப்படுத்துவதற்கு (Curative) மாத்திரம் மேற்கொள்ளப்படுவதில்லை. சிலரின் நோயைக் குணப்படுத்த முடியாதாயினும், நோயாளி இறைவனடி சேருமட்டும், கஷ்டப்படாமல் சில முக்கிய கடன்களைச் செய்ய வழி வகுக்குமாறு (Palliative) மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக களப்புற்று நோய் படர்ந்து குணப்படுத்த முடியாதாயினும், உணவு விழுங்குவதற்கு வேறுவழி ஏற்படுத்த குடல் பொருத்தல்.

சத்திரசிகிச்சை மேற்கொள்வதால் எதுவித 'அபாயம்', இடர், [Risk] இல்லையா என மக்கள் கேட்பதுண்டு. இதற்கு வாழ்க்கையில் ஏற்படும் சில 'அபாயங்களை' சுட்டிக்காட்டி விளக்கம் கூற வேண்டியிருக்கிறது. வீதியில் போகும் பொழுது விபத்துக்குள்ளாகும் அபாயம் உண்டு. மரம் ஏறும் பொழுது விழும் அபாயம் உண்டு. மின்சார வேலையில் ஈடுபடுவோருக்கு அதிர்ச்சி ஏற்படும் அபாயம் உண்டு. தையல் செய்யும் பொழுது ஊசி குத்தும் அபாயம் உண்டு. இதற்காக குறிப்பிட்ட செயல்களை நாம் நிறுத்துவதில்லை இதேபோல், எவ்வித சத்திர சிகிச்சை, எவரில் போன்ற பல அம்சங்களைத் தங்கி குறைந்த, கூடிய 'அபாயங்கள்' உண்டு. ஆனால் இவற்றைத் தடுப்பதற்கு, குறைப்பதற்கு முன்கூறிய ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பதும் அல்லாமல், வேறு நடவடிக்கைகளும் பின்வருமாறு மேற்கொள்ளப்படுகின்றன.

முதன்முதலாக ஒருவரின் சத்திர சிகிச்சைக்குக் காரணங்கள் (Indications) இருந்தால் தான், இச்சிகிச்சை அளிக்கப்படும். ஒரே நோய்க்கு வெவ்வேறு நோயாளிகளில், காரணங்கள் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். இளம் வயதில் கூலிவேலை செய்பவர்களில் குடல் இறக்கம் இருந்தால் சிகிச்சை அளிக்கப்படும். குணப்படுத்தக் கஷ்டமான புற்றுநோயால் பாதிக்கப்பட்ட முதியவரில் ஒரு காலமும் அடைபடாத குடலிறக்கமானால், சத்திர சிகிச்சை அளிப்பது அரிது.

சிகிச்சைக்கு எவ்வித உணர்வழிப்புத் தகுந்தது என உணர்வழிப்பு நிபுணருடன் ஆலோசிக்கப்படும். ஒவ்வொருவரின் உடல்நிலை மேற்கொள்ளப்பட வேண்டிய சத்திரசிகிச்சை முதலியன கருத்தில் கொண்டு முழு உணர்வழிப்பு General anaesthesia) முண்ணண் வழிப்பு (Spiral anaesthesia), பிரதேச வழிப்பு Regional anaesthesia). ஓரிட வழிப்பு [Local anaesthesia] முதலியவற்றில் ஒன்று மேற்கொள்ளப்படும். இவற்றுக்குத் தகுந்த முன் கவனிப்புகளும் மேற்கொள்ளப்படும.

(வளரும்)


## மாணவர்களே! ஏமாறுதீர்கள்!!

எமது பழைய மாணவர்களிடம் கடந்த கால பரீட்சைப் பெறுபேறுகளைத் திரவிசாரித்துச் சேர்ந்து கொள்ளுங்கள். அகில உலக பரிசில்களைக்கூடப் பெற்றிருக்கிறார்கள்.

இன்று குதூகல ஆரம்பம்:

# C. I. M. A.

**Stages I & II**

● கொழும்பில் 15 வருடகாலமாகப் புகழ்பெற்று, தொடர்ந்து யாழ் நகரில் 6 வருடங்களாக சேவை நோக்குடன், பல சாதனைகளைப் புரிந்து வரும் விரிவுரையாளர் குழு:

திருவாளர்கள்:

V. கருணாநிதி    S. P. சிவஞானம்    S. சிவபாலன்
பிலிப்    சிறிநந்தகுமார்

● To sit your Exams. With absolute confidence Enrol with

# RAPID RESULTS INSTITUTE

212, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

[11202]


## வாசகர் திருமுகம்

### பஸ் கொள்ளைகளைத் தடுக்க...

யாழ் - கொழும்பு பஸ் கொள்ளைகளைத் தடுக்கும் தற்காலிக வழியாக பிரயாணிகள் இரவுப் பயணத்தை விட்டுப் பகல்ப் பிரயாணத்தை ஏற்படுத்திக் கொண்டால் பாதுகாப்பாக இருக்கும்.

சகல யாழ் - கொழும்பு மினி பஸ்களும் இரவு புறப்படுவதை நிறுத்தி, காலை புறப்பட்டு மாலை யாழ்ப்பாணத்தை அடைவதாக ஒழுங்கு முறையை மாற்றினால் பயணிகளுக்கும் உடைமைகளுக்கும் ஓரளவு பாதுகாப்பு ஏற்படும்.

ச. உதயகுமார்.
சண்டிலிப்பாய்.

### ஆசிரியர் பற்றாக்குறை

வடமராட்சி கிழக்கில் உள்ள ஆழியவளை சி. கி. சி த. க. பாடசாலையில் பல வருடங்களாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இப்பாடசாலையில் இவ்வாண்டு 470 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். பத்தாம் ஆண்டுவரை வகுப்புகள் உண்டெனினும், ஆறு ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். ஆங்கில ஆசிரியர், சேவையில் இன்மையும் பெருங் குறையாகும்.

அண்மையில் நடந்த ஆசிரியர் நியமனங்களில் ஆரம்ப ஆசிரியர் ஒருவரும், கணித ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறைந்தது பதினேழு ஆசிரியராவது கடமைபுரிய வேண்டியவிடத்து, ஆறு ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். இவ்விடயம் சம்பந்தமாக மேலதிகாரிகளின் கவனத்தைப் பெறுமா?

ஆழியவளை.    மு. அரியரத்தினம்

## கையாலே சாப்பிடக் கூசுகிறது என்று கூறும் தமிழர்கள்

★ தமிழர்கள் தந்தையும் தாயும் மகிழ்வுடன் சூட்டிய அழகு தமிழ்ப் பெயர்களை மாற்றி அந்நியப் பெயர்களை வைத்து தாம் தமிழர் என்பதை மறைக்கும்போது,

★ தமிழர்கள் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்யாமல் அந்நியப் பெண்களுடன் வாழும்போது,

★ தமிழர்கள் தோடுகள் போட்டு, தலைமயிர் வளர்த்து கண்டபடி உடுக்கும்போது,

★ தமிழர்கள் சற்று டாலர்களைச் சம்பாதித்ததும் தாம் இலங்கைத் தமிழர் அல்லர் வேறு நாட்டவர்கள் என்று கூறும்போது

★ தமிழர்கள் ஒருநாட்டுக்குச் சென்று குடியேற உதவி புரிந்தவர்களுக்குத் துரோகம் செய்யும்போது,

★ தமிழர்கள் இடியப்பம், தோசை, இட்டலி, பிட்டு சாப்பிட கத்தியும் முள்ளும் பாவித்து கையாலே சாப்பிடக் கூசுகிறது என்று கூறும்போது,

★ தமிழர்கள் பணம் சம்பாதிக்க மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு மற்றத் தமிழர்களுக்கும் அவமானத்தை ஏற்படுத்தும்போது ......

இலங்கையிலுள்ள துயர்ப்படும் தமிழர்களுக்கு எத்தகைய உதவியை அவர்களால செய்யமுடியும்?

தமிழா, இதுவா உன் நிலை என்று கேட்பதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்?

— இப்படிக் கண்ணீர்விட்டுக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் கனடா வாசகர் ஒருவர்.

# மார்ட்டின் விக்கிரமசிங்கவின் நூற்றாண்டு நினைவு

தலை சிறந்த சிங்கள எழுத்தாளரான மார்ட்டின் விக்ரமசிங்கவின் நூறாவது ஜனன தினம் 1990ஆம்ஆண்டு மே மாதம் வரை கொண்டாடப்பட இருக்கிறது.

மார்ட்டின் விக்ரமசிங்க உலகத்தரமான சிறு கதைகளும் நாவல்களும் எழுதிய சிருஷ்டி எழுத்தாளர்; தொன்மைச் சிங்கள இலக்கியம், பௌத்தமதம் ஆகியன பற்றிய சிறந்த ஆய்வாளர். அத்துடன் அவர் ஒரு முன்னோடிப் பத்திரிகையாளருமாவார். கால் நூற்றாண்டுக்கு மேலான காலம் அவர் ஒரு பத்திரிகையாளராகப் பணிபுரிந்தார்.

சிங்கள இலக்கியத்தைஉலக அரங்கில் ஏற்றிய பெருமை மார்ட்டின் விக்ரமசிங்கவையே சாரும்.

மார்ட்டின் விக்ரமசிங்காவின் பல நூல்கள் பிறநாட்டு மொழிகளில் வெவிவந்துள்ளன. 1958இல் இவருடைய சிறுகதைத் தொகுதி ருஷ்ய மொழியில் வெளியாகியது. ''மடெலதூவ'' நாவல் சீன, பல்கேரிய, ஆங்கில, ருமேனிய மொழிகளில் வெளிவந்துள்ளன.

மார்ட்டின் விக்கிரமசிங்க தமது சுயசரிதையை ''உபன்தாசிட''(பிறந்த நாள் முதல்) என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார்.

மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதிய ''கம்பெரலிய'' நாவல் கிராமிய மக்களைப் பற்றிய சிறந்ததோர் நூல். கிராமங்களில் ஏற்படும் மாற்றங்களை மிகவும் யதார்த்த பூர்வமாக இந்த நாவலில் மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதியுள்ளார்.

— பாரதிநேசன் —


## ★ ரெருசோ ★

மூலப்பொருள்கள் விற்பனை

- ✶ வெளிநாட்டு சிப்ஸ்
- ✶ கலர் பவுடர் வகைகள்
- ✶ வெள்ளைச் சீமெந்து
- ✶ மற்றும் தேவையான பொருள்கள்

ரெருசோ மாபிள் பதிக்கும் வேலை செய்து கொடுக்கப்படும்.

# ★ மாபிள்ஸ் ★

281-D, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[C2798]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ஹொங்கொங் ★

## நாட்டிற்கான உடனடி வேலை வாய்ப்புக்கள்

1. தச்சுத் தொழிலாளர்
2. மேசன்
3. லேபரர்
4. கம்பி வளைப்பவர்
5. பிளம்பர்
6. பெயின்ரர்
7. எலக்றிசியன்
8. பிளான்ட் ஒப்பறேற்றர்
9. கனரக சாரதி
10. மெக்கானிக்

**சம்பள அளவுத் திட்டம் 16,000 – 36,000 வரை**
(தொழிற் சந்தோரினூடான வேலை வாய்ப்பு)

## ★ சவூதி ★

ஏயார் போட் கிளினேர்ஸ் — 450 றியால்
கொஸ்பிட்டல் கிளினேர்ஸ் — 450 றியால்

மேலதிக விபரங்களுக்கு:

**மியூனிஸ்ட் என்ரபிறைசஸ்,**
156, 1 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் பாடசாலை முன்பாக)
Labour Licence No: 609

(C/2826)


மாகாணசபைத் தேர்தல்

## பூர்வாங்க ஆட்சேபனை மீது 16 ஆம் திகதி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 11
மட்டக்களப்பு மாகாண சபைத் தேர்தல் ஆட்சேபனை மனுவுக்கு எதிராக அரசு சமர்ப்பிக்கும் பூர்வாங்க ஆட்சேபனை மீதான விசாரணை இம்மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஏ. டி. இலட்குணவர்த்தன அறிவித்தார்.

இவ்வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அரசு தரப்பிலான ஆட்சேபனைகள் இம்மாதம் 9 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்று அரசு சட்டத்தரணி எப். என். குணவர்த்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த தேர்தலை செல்லாது என்று அறிவிக்கும்படி கோரி பூபாலபிள்ளை சந்திரகுமார் என்பவர் இந்த ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார். [இ-எ]

## பாரராட்டு விழா

யாழ்ப்பாணம் ஜூன் 11
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மேலாளராகப் பல்லாண்டுகள் பணிபுரியும் திரு. சி. த. நடராஜன் எழுபது ஆண்டுகள் நிறைந்த வாழ்வைப் பெற்றமையை நினைவு கூரும் பொருட்டு நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பட்டாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இவரை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரியஸ்வாமிகள் பூசை முகத்தில் நிறுத்தி பட்டாடை போர்த்திக் கௌரவித்தார்.

இவ்விழாவில் கவிஞர் இலகம் நாக பரமசாமி தமிழ்மணி, சு. கணேசசுந்தரம் ஆகியோர் திரு. நடராஜனைப் பாராட்டிப் பேசினார்கள்.


ஓம்

# ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!
நிகழும் சுக்கில ஸ்ரீ வைகாசித்திங்கள் 32ஆம் நாள் (14-06-89) புதன்கிழமை
மு. ப. 10.20 மணி முதல் மு. ப. 11.45 மணி வரையுள்ள
சிங்க லக்கின சுப முகூர்த்தத்தில்.

எங்கள் புதல்வன் திருநிறை
**செல்வன் சி. சுதாகரன்**
அவர்களுக்கும்

எங்கள் புதல்வி திருநிறை
**செல்வி வா. ரதி**
அவர்களுக்கும்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெறவிருக்கும்
மங்கல நாண் பூண் மண விழா விழாவுக்குத் தாங்கள், தங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்துவதுடன்
மதிய போசனத்திலும் பங்குபற்றும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திரு. க. சிவசுப்பிரமணியம்,**
(சமாதான நீதிவான்)
**திருமதி ம. சிவசுப்பரமணியம்,**
8 ஆம் கட்டை ஒழுங்கை,
மல்லாகம்.

**திருமதி சி. வாமதேவன்**
(காலம் சென்ற திரு. வி. வாமதேவன்
பாரியார் — இலங்கை வங்கி)
37, கோயில் வீதி,
நல்லூர்.

[11214]



# அந்தியேட்டி அழைப்பிதழ்



மறைவு:
14-05-1989

31 ஆம் நாள் திதி:
12-06-1989

அமரர்

## திருமதி மகேஸ்வரி சாந்தமூர்த்தி

கடந்த 14. 05. 1989 இல் காலமான எமது அன்புத் தெய்வம் அமரர் திருமதி மகேஸ்வரி சாந்தமூர்த்தி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 12. 06. 1989 திங்கட்கிழமை காலை 6.00 மணி அளவில் நடைபெறும். இவ்வைபவத்திற்கு வருகைதந்து கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிள்ளைகள்

ஒழுங்கைத் தோட்டம்,
வல்வெட்டி'
வல்வெட்டித்துறை.

(893)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## இராசேந்திரம் மகேஸ்வரி

தோற்றம்:
26. 12. 1931

மறைவு:
12. 05. 1989

இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தந்தி மூலம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள்.


கணவன், பிள்ளைகள்,
உறவினர்.

நாவற்கட்டை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(11213)




# தையலுக்குத் தையல்!
# நம்பிப் பாவிக்கத் தகுந்த சிங்கர் கொன்டெசா!



தையல் வேலைப்பாடுகளை நீங்கள் பரீட்சித்துப் பார்க்க வாய்ப்பளிக்கிறது

- கற்றைத் தையல்
- பிறைத் தையல்
- சிகரத் தையல்
- இரட்டை ஓரவரித் தையல்
- சிப்பித் தையல்
- துளித் தையல்
- வளைவு விதத் தையல்
- சிப்ளித் தையல்
- அடுக்குத் தையல்
- மறிப்புத் தையல்
- மேட்டுத் தையல்
- கொடித் தையல்
- சாவித் தையல்
- சிக்-சக் முனைத் தையல்
- நீண்ட மறைவுத் தையல்
- கூரைத் தையல்
- கயிற்றிழைத் தையல்
- மூன்றடித் தையல்
- சைகைத் தையல்



**சிங்கர்***
மாசற்ற மேன்மை
**கொன்டெசா**

ரூ.8,490/-

நவீன நாகரிகக் கோலங்கள் தரிக்க ஒரே வழிகாட்டி.



முன் புறமாய் எடுக்கும் மேலதிக ரகத் தையல்கள் பொபின்.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம் வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

**பொருள்:**

ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் நாணம் உடையவனாக வேண்டும்; குடியின் உயர்வு வேண்டுமானால் எல்லோரிடத்தும் பணிவு வேண்டும்.

உதயன்
இல. 392/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22072
11 - 06 - 1989  உ. பெ. இல. 88

## நூறுக்கு ஆறு: நோக்கம் என்ன?

யாழ்ப்பாணம் கல்விப் பகுதிக்குக் கிடைத்த எட்டுக் கோடியே நாற்பது லட்சம் ரூபா பணம், பயன்படுத்தப்பட முடியாத நிலையில், பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடக்கிறது. உபயோகம் எதுவும் இன்றித் 'தூங்கி'க் கொண்டிருக்கிறது! — இது செய்தி.

இராணுவ நடவடிக்கைகளால் சேதமுற்றுப் போன பாடசாலைக் கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கென, பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கிய பணத்தின் கூட்டுத் தொகையே எட்டுக்கோடி நாற்பது லட்சம் ரூபாவும் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டியது.

1983 ஆம் ஆண்டு தொடக்கம், ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகளில், அறிவுச் சாலைகளான பள்ளிக்கூடங்கள் பலவும் சேதமாக்கப்பட்டதும், நாசமாக்கப்பட்டதும் அடங்கும். எதிர்காலத் தமிழ்ச் சந்ததியின் கல்வி வளர்ச்சிக்கு, மேம்பாட்டுக்கு, வேட்டு வைப்பதற்காக, பல பாடசாலைகளுக்கு பீரங்கி வேட்டு வைத்தும், ஷெல் அடித்தும், குண்டு வீசியும் அவை சேதமாக்கப்பட்டன; முற்றிலும் நாசமாக்கப்பட்டன.

இதுவும் இனப்படுகொலைக்கு அடுத்து நிற்கும் பண்பாட்டுப் படுகொலை என்பதை இப்பத்தியில் பல தடவைகள் எடுத்துரைத்து உள்ளோம்.

இராணுவ அட்டூழியம் இல்லாத, அமைதியும், சமாதானமும் நிலவும் நாடுகளில், பிரதேசங்களிற் கூட, சனத்தொகை அதிகரிப்பின் விளைவு, கல்வி அறிவு பெறுவோர் எண்ணிக்கை உயர்வு போன்ற காரணிகளால், பாடசாலைகளில் இடநெருக்கடி கட்டட மற்றும் தளபாடத் தட்டுப்பாடு என்று பல பிரச்சினைகள் பல்கிப் போயுள்ளதைக் காண்கிறோம். மூன்றும் உலக நாடுகளிலோ நிலைமை மோசம்.

அப்படியிருக்க, இருந்த கட்டட வசதிகளே நிர்மூலமாக்கப்பட்ட நிலையில், தமிழ் மாணவரின் கல்வி வசதியும், இடநெருக்கடியும் எந்தளவுக்குப் பெரும் பிரச்சினைகள் என்பதை விரித்து விளக்க வேண்டியதில்லை. தமிழ்ப் பிள்ளைகளின் இந்த அவலத்தை உணர்ந்த உலக வங்கி மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், இராணுவ நடவடிக்கைகளால் சேதமுற்ற பாடசாலைக் கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்ய நிதி உதவி வழங்கின.

தமிழ் மாணவர் நிலை கண்டு பரிதாபம் கொண்டும், மனிதாபிமானம் காட்டியும் அவர்கள் வழங்கிய பணம், நிதியாகவே இருக்கிறது! ஆனால் தமிழ் மாணவர்களோ குந்தியிருந்து பயிலவும் இடம் இல்லாமல் இடர்ப்படுகிறார்கள்!

பணத்தைத் தக்கபடி செலவு செய்து கட்டடங்களை எழுப்புவதற்கு உத்தியோகத்தர்கள் இல்லை என்பது தான் மூல காரணம்! குறைந்தது நூறு பேர்களாவது தேவை; ஆனால் உள்ளவர்களோ ஆறுபேர் தான்.

எது எதற்கோ எல்லாம், எப்படி எப்படியோ, விதிமுறையும் இல்லை, ஒழுங்கு முறையும் இல்லை என்று நியமனங்கள் நடக்கின்றன. அரசாங்கத் திணைக்களங்களில் ஆனால் அவசர தேவையான பாடசாலைகள் புனர்நிர்மாணத்தைக் கவனிக்க உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை.

ஏன் இந்தக் கோலம்? வெளிமாவட்டங்களில் உள்ள தமிழ் உத்தியோகத்தர்களையாவது மாற்றினால் சிலராவது தேறமாட்டார்களா?

குடாநாட்டுப் பாடசாலைகளின் புனர் நிர்மாணத்தில் தாமதம் காட்டி செலவிடப்படாத நிதி என்று வேறு திசைக்கு அதனைத் திருப்பும் உள்நோக்கம் கொழும்பு மேலிடத்துக்கு உண்டோ?

அந்த வழக்கத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது. அடிக்கடி இடித்துரைத்து, விடயத்தை வலியுறுத்திக் கூறி புனர்நிர்மாண வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய உத்தியோகத்தர்களை நியமிக்கச் செய்வது உள்ளூர் அதிகாரிகளின் திறமைக்குச் சவால்.

கொழும்பிலிருந்து வரும் நிதிகள் திரும்பிச் செல்லாமல் இருக்க, தமிழ்ப் பகுதிகள் எங்கும் உள்ள திணைக்களங்களின் தலைவர்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும். குறைபாடுகள், கஷ்டங்கள் உரிய நேரத்தில், உரிய இடத்தில் காதில் போடப்படவில்லை என்ற ஓடிசல் நிலைக்கு இடங்கொடாமல் அவர்கள் பார்த்துக் கொண்டால், தாமதம் அசமந்தம் அக்கறையில்லாமை என்பன எங்கே இருக்கின்றன என்பதைத் தெளிவுபடக் காட்டலாம்.

## பாட்டுக்குப் பொருளானாய்

எடுப்பு

பாட்டுக்குப் பொருளானாய் நாகம்மா - நான்
பண்ணிசைக்க வரம் தந்து காரம்மா என்
(பாட்டு)

தொடுப்பு

கூட்டும் தமிழ் இனிமை கூட்டி வைத்தாய் - நயினை
குலவும் கவிவளத்தைப் பெருக்கி வைத்தாய்
(பாட்டு)

முடிப்பு

நாட்டும் அருட்பொலிவை நாட்டி வைத்தாய் - எங்கள்
நலிவை நல்லருளால் போக்கி வைத்தாய்
தேக்கும் இன்பநிலை தேடிவைத்தாய் - அம்மா
தேவி உன் பெருமை பாடி வைத்தேன்
[பாட்டு]

நயினைக் கவிஞர் நாக.சண்முகநாதபிள்ளை

(இன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 7ஆம் திருவிழா — 11-6-1989)

# பணவீக்கமும் ஊழல் குற்றங்களுமே சீனாவின் நெருக்கடிக்குக் காரணம்

## சோவியத் பத்திரிகை 'பிராவ்தா' குற்றச்சாட்டு

மாஸ்கோ ஜூன் 10

சீனாவில் மாணவருக்கு எதிராக ஆட்சியாளர் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து சோவியத் நாளிதழ் 'பிராவ்தா' கருத்து வெளியிட்டிருக்கிறது.

ஜனநாயகத்தின் அடிப்படையில் சட்டத்திற்குட்பட்ட முறையில் [மேற்]கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் மட்டுமே சீனாவில் ஸ்திரநிலைப்பாட்டை ஏற்படுத்தலாம் என்று அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

சோஷலிச நாடுகளில் அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் நடைமுறைகளை அமுல் நடத்துவது வேதனையான நிகழ்ச்சியாக அமைந்து வருவதாகவும் இப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

சில சோஷலிச நாடுகளில் சீர்திருத்தங்கள் விரைவாக ஏற்படுத்தப் படுகின்றன.

சீனாவில் அரசியல் சீர்திருத்தங்களுக்கு முதல் பொருளாதார சீர்திருத்தம் ஏற்படத் தொடங்கி விட்டது.

இரண்டு சீர்திருத்தங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பாக நடைமுறைப்படுத்தப் படாதது துரதிஷ்டவசமாகி விட்டது.

சீனாவின் தற்போதைய நிலைக்குக் காரணம் பணவீக்கமும் ஊழலுமே.

இப்படி பிராவ்தா எழுதியிருக்கிறது. (எ)

## டெங்கின் 'பட்டம்' பறிக்கப்படலாம்

பிலாடெல்பியா! ஜூன் 10

1979 இல் சீனப்பெருந் தலைவர் டெங்ஷியாபிங்குக்குவழங்கப்பட்ட கௌரவப்பட்டத்தை ரத்துச் செய்வது பற்றி அமெரிக்காவில் உள்ள டெம்பிள் பல்கலைக்கழகம் ஆராய்ந்து வருகின்றது.

பீகிங் அரசு மாணவரைப் படுகொலை செய்ததை ஆட்சேபிக் ம்முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது (எ)

## டெலிவிஷனில் தோன்றிய சீனப் பெருந் தலைவர்



சீனப்பெருந் தலைவர் டெங் ஷியாபிங் நேற்று டெலிவிஷனில் தோன்றினார்.

சீன அரசுத்தலைமைப்பீடத்தை தற்போது கைப்பற்றியுள்ள பதினொரு கடும்போக்காளர்களும் திரு. ஷியாபிங்குடன் டெலிவிஷனில்சாட்சி அளித்தனர்.

மாணவர் கிளர்ச்சியை அடக்கியதற்காக இராணுவத்தலைவர்களை திரு. ஷியாபிங் பாராட்டினார்.

இதேவேளை திரு. டெங் ஷியாபிங்கிற்குச் சிகிச்சைஅளித்து வரும் டாக்டர்கள் பாதுகாப்புப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக 'மிஸ்பாஓ' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டது.

திரு. ஷியாபிங்கின் உடல்நிலை பற்றிய தகவல்கள் வெளியேறுது இருக்கவே இந்தநடவடிக்கை என்று சொல்லப்பட்டது. (எ)

## சுரினாம் விமான விபத்தில் ஒலிம்பிக் வீரரும் மரணம்!

சுரினாம், ஜூன் 10

சுரினாம் நாட்டில் நடந்த விமான விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 174 ஆக உயர்ந்தது.

சுரினாமுக்குச் சொந்தமான டி. சி. 8 ரக விமானம் ஒன்று ஐரோப்பாவில் இருந்து 180 பயணிகளுடன் தலைநகர் வந்து கொண்டிருந்தது.

பனிமூட்டம் காரணமாக அது விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தோரில் இராணுவத் தளபதி, விமானப் படைத் தளபதி, பிரபல உதைபந்தாட்ட வீரர்கள் மூவர் ஆகியோரும் உள்ளனர். 11பேர் உயிர்தப்பினர்.

கடந்த சோல் ஒலிம்பிக்ஸ் விளையாட்டில் சுரினாமுக்காக முதலாவது தங்கப்பதக்கத்தை வென்று கொடுத்த அன்டனி நெஸ்டி என்ற வீரரும் இவ் விபத்தில் மாண்டவர்களில் ஒருவர்.

நீச்சல் போட்டியில் இவருக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது. (எ)

## இஸ்ரவேலிய இராணுவம் சுட்டு இரண்டு பலஸ்தீனியர் பலி

ஜெரூசலம், ஜூன் 10

காஸா பிரதேசத்தில் இஸ்ரவேலிய இராணுவம் சுட்டு இரண்டு பலஸ்தீன இளைஞர் மரணம் அடைந்தனர்.

ஒருவர் 22வயது இளைஞர்; மற்ற இளைஞனின் வயது 14.

இதனிடையில் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவை இஸ்ரவேலிய அரசு நீடித்துள்ளது.

இதனால் 6 லட்சத்துக்கும் அதிகமான பலஸ்தீனியர் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். (எ)

# இசைக் கோயிலின் மூலவிக்கிரகம் சங்கீத பிதாமகர் செம்மங்குடி!

## சதாபிஷேக விழாவில் முதல்வர் கருணாநிதி புகழ்மாலை

சென்னை, ஜூன் 10

கோயிலின் கர்ப்பக் கிருகத்தில் உள்ள மூலஸ்தான மூர்த்தி போன்றவர் பழம் பெரும் சங்கீத மேதை செம்மங்குடி சீனிவாசய்யர்.

தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

செம்மங்குடியின் 80 ஆவது பிறந்ததின விழா சென்னையில் கடந்த புதன்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யர் சதாபிஷேகம் விழா குழுவினர் ஒழுங்கு செய்த பாராட்டு விழாவில் முதலமைச்சர் கலந்துகொண்டு பேசுகையில் சொன்னதாவது;

கோயில் கோபுரத்தில் எத்தனையோ சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன

அவை கண்கவர் வர்ணத்தில் காணப்படுகின்றன.

அவற்றை நாம் வணங்குவதில்லை. கர்ப்பக் கிருகத்தின் உள் இருக்கும் மூலஸ்தான மூர்த்தியைத்தான் நாம் வணங்குகின்றோம்.

அது போன்று இசைக் கோயிலின் மூல விக்கிரமாகத் திகழ்கின்றார் செம்மங்குடி.

நான் பதவியில் இல்லாதிருந்த சமயத்தில் செம்மங்குடி அடிக்கடி [என்னைச்] சந்திப்பார்.

நுண்கலைகளை வளர்க்க முத்தமிழ்ப் பேரவை என்ற அமைப்பை ஆரம்பித்தபோது செம்மங்குடி என்னுடன் ஒத்துழைத்தார்.

1969 ஆம் ஆண்டில் மத்திய அரசு விருதுகள் வழங்கும் விஷயத்தில் மாநில அரசுடன் கலந்தாலோசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் செம்மங்குடிக்கு பத்மபூஷண் விருது வழங்க சிபார்சு செய்தேன்.

செம்மங்குடியின் சேவைகளைப் பாராட்டி வெளியிடப்பட்டுள்ள புத்தகத்தில்அவரது கச்சேரிகளை விமர்சிக்கும் கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன. இதை அனுமதித்ததன் மூலம் செம்மங்குடி தனது பரந்த மனப்பான்மையை காட்டியிருக்கிறார்.

ஆகாசவாணியில் செம்மங்குடி பணிபுரிந்த சமயம், அவரைப் பார்க்க பிரபலமான ஒரு புள்ளி சென்று இருந்தார்;

முதல் நாள் திருச்சி வானொலியில் செம்மங்குடியின் கச்சேரி ஒன்று இடம் பெற்றிருந்தது.

"அதில் கரகரப்பிரியா ராகத்திலான உங்கள் பாடல் மனதைத் தொடுவதாக அமையவில்லையே" என்று அந்தப் புள்ளி சொல்லி வருத்தப்பட்டார்.

உடனே செம்மங்குடி வானொலி நிலைய ஸ்ருடியோவின் அறைக் கதவுகளை மூடிவிட்டு, அப்புள்ளிக்கு 'கரகரப்பிரியாவை' பாடினார். அப்புள்ளியும் மனத் திருப்தியுடன் திரும்பிச் சென்றார்.

இப்படி முதலமைச்சர் தெரிவித்தார்.

சதாபிஷேகக் குழுவின் தலைவர் திரு. எஸ். விஸ்வநாதன் பேசுகையில்—

18 வயதில் இருந்து இசைக் கச்சேரி செய்துவரும் செம்மங்குடி இசை உலகின் பிதாமகர் என்று வர்ணித்தார்.

நீதியரசர் எஸ். மோகன்: இசை உலகில் சரித்திரம் படைத்தவர் செம்மங்குடி. 'அவரது மானச சஞ்சாரே' பாடல் இன்றும் தனி முத்திரையோடு திகழ்கிறது.

செம்மங்குடி பதிலளிக்கையில், முதலமைச்சர் கருணாநிதி நடிப்புத் திறமையுள்ள ஒரு கலைஞர்.

பண்டைக் காலத்தில் சாரங்கதேவா, வெங்கடமஹி ஆகிய கலைஞர்கள் அமைச்சர்களாக இருந்தனர்.

அது போன்று கலைஞர் ஒருவரின் தலைமையில் அரசு நிர்வாகத்தைப் பெற்றுள்ள தமிழ் மக்கள் புத்திசாலிகள். என்று சொன்னார். (எ)

## குறளோவியம் ஆங்கிலத்தில்

சிதம்பரம், ஜூன் 10

கலைஞர் கருணாநிதியின் குறளோவியம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வைரவிழாவின் போது ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியிடப்படும்.

இத்தகவலை துணைவேந்தர் சேது நாராயணன் வெளியிட்டார்.

'குறளோவியம்' நூலை மொழிபெயர்க்க கலைஞர் கருணாநிதி ஒப்புதல் கொடுத்திருக்கிறார். (எ)

## காங்கிரஸ் எம்.பி. வைஜயந்திமாலா காயமடைந்தார்

சென்னை, ஜூன் 6

முன்னாள் நடிகையும், தற்போது இந்திரா காங்கிரஸ் எம்பியாகவும்இருக்கும்திருமதி வைஜயந்திமாலா கடந்த ஞாயிறு இரவு நடந்த விபத்து ஒன்றில் காயமடைந்தார்.

அடையாறில் திரு. வி. க. பாலத்தின் நுழைவாயில் அருகே அவர் பயணம் செய்த கார் மீது இன்னொரு அம்பாஸிடர் கார் மோதியது.

அவரின் காரைப் பின் தொடர்ந்து காரில் வந்த பொலிஸ் கமிஷனர் பி. துரை திருமதி வைஜயந்திமாலாவின் காரின் மீது மோதிவிட்டு மறைந்த காரைத் துரத்திச் சென்று சத்யா ஸ்ருடியோ அருகே வைத்து மறித்தார்.

காரை விட்டுவிட்டு அதன் சாரதி தப்பிவிட்டார். (எ)

## பத்தாயிரம் வசனங்கள் எழுதும்வரை சிறைவாசம்

கலிபோர்னியோ, ஜூன் 10

வழக்கு ஒன்றில் எதிரிக்கு நீண்ட... தண்டனை ஒன்றை கலிபோர்னியோ முனிசிப்பல் நீதிமன்றம் விதித்தது.

தனக்குச் சொந்தமில்லாத கார் ஒன்றை வைத்திருந்ததாக திமோதி லொகின்ஸ் என்பவர் மீது இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அழைப்பாணை பல முறை அனுப்பப்பட்டிருந்தும் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியிருந்தார்.

கடைசியாக அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

குற்றத்தை ஒப்புக் கொண்ட அவருக்கு புதுவிதமான சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

ஒன்பது சொற்கள் கொண்ட வசனம் ஒன்றை பத்தாயிரம் தரம் எழுதி நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தால், சிறையில் இருந்து அவர் விடுவிக்கப்படுவார்—

இது தான் தண்டனை. அந்த வசனம் வருமாறு;

''எனக்குச் சொந்தம் இல்லை என்றால் அதை நான் எடுக்கப் போவதில்லை'' (If I dont own it, I won't take it) -என்பதே.

10 ஆயிரம் தரம் அவ்வசனத்தை எழுதிய தாள்களை நீதிமன்றத்தில் லொகின்ஸ் சமர்ப்பித்தவுடன் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

லொகின்ஸின் கையெழுத்துடன் அவர் எழுதிய 10ஆயிரம் வசனங்களும் பொருந்துதா? என்பதை நீதிபதி பார்த்தாரா? என்பது தனக்குத் தெரியாது என்று நீதிமன்ற லிகிதர் பெவர்லி டிலக்ஸி சொன்னார். [எ]

## இந்தியா-பாக். எல்லைப் பேச்சுகள்

இஸ்லாமபாத், ஜூன் 10

எல்லைப்புற சியாச்சென் பனிப்பிரதேச தகராறு குறித்து இந்திய, பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு இம் மாதம் 14 முதல் 17 ஆம் திகதி வரை இஸ்லாமபாத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## காங்கிரஸில் சேரமாட்டேன் சிவாஜி கணேசன் அறிவிப்பு

கும்பகோணம், ஜூன் 10

இந்திரா காங்கிரஸில் மீண்டும் சேருவேன் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று சிவாஜிகணேசன் அறிவித்திருக்கிறார்.

கடந்த தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் திரு. சிவாஜிகணேசன் தலைமையில் தமிழர் முன்னேற்ற முன்னணி அ.தி.மு.க. ஜானகி அணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டது தெரிந்ததே.

தஞ்சையில் காங்கிரஸ் தலைவர் துளசிவாண்டையால் மணிவிழாவில் கலந்து கொண்ட பின்னர் சிவாஜி செய்தியாளருக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் காங்கிரஸில் சேரப்போவதில்லை என்பதை அறிவித்தார்.

## சுழலும் உலகில்

### ஆயிரம் ஆண்டு அலங்காரப் படகு

டாக்கா, ஜூன் 10

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அலங்காரப் படகு ஒன்றை பங்களாதேஷ் விவசாயி ஒருவர் தோண்டி எடுத்தார்.

ரங்பூர் மாவட்டத்தில் டெபிகான்ஜ் பகுதியில் வசித்து வருபவர் அப்துல் சத்தார் என்ற விவசாயி. சிறுகுளம் ஒன்றை அவர் தோண்டிக் கொண்டிருந்த போது இந்த அலங்காரப் படகைக் கண்டெடுத்தார்.

தங்கத்தினால் செய்யப்பட்ட இப் படகு 4 கிலோ எடையானது.

இதன் மதிப்பு அமெரிக்க டாலரில் 62500 ஆகும். (எ)

### மந்திரவாதிக்கு ஆயுள் தண்டனை

சண்டிகார், ஜூன் 10

இறந்துபோன கணவனை மீண்டும் உயிர்ப்பித்துத் தருவதாக மனைவியை இரண்டு ஆண்டுகளாக ஏமாற்றி வந்த மந்திரவாதி ஒருவருக்கு சண்டிகார் நீதிமன்றம் ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதித்தது.

இமாலயப் பிரதேசத்தில் வன இலாகா உதவி அதிகாரி எஸ்.ஆர். டட்டா காலமானார்.

அமிர் சந்த்செளசல் என்ற மந்திரவாதியே அவருக்கு சிகிச்சை அளித்து வந்தார்.

டட்டா இறந்த பின்னர் அவரது மரணத்தை வெளி உலகுக்கு அறிவிக்க வேண்டாம்என்று அவரது மனைவிக்கு மந்திரவாதி நிர்ப்பந்தம் கொடுத்து வந்தார்.

இரண்டு ஆண்டு காலமாக அவரது உடல் பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது.

1987 ஜூன் மாதத்தில் இந்த விஷயம் பத்திரிகைகள் மூலம் அம்பலப்படுத்தப்பட்டது.

அதைத் தொடர்து பொலீசார் திருமதி டட்டாவின் வீட்டினுள் புகுந்து உடலைக் கைப்பற்றி தகனம் செய்தனர். (எ)

### யானைகளைப் பாதுகாக்கும் அமெரிக்கா

வாஷிங்டன் ஜூன்10

யானைத்தந்தங்கள் இறக்குமதி செய்வதை அமெரிக்கா தடை செய்திருக்கிறது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத்தினம் அன்று அதிபர் புஷ் இது சம்பந்தமான உத்தரவைப் பிறப்பித்தார்.

யானை இனம் உலகில் அருகி வருவதைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அதிபர் புஷ் தெரிவித்தார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் இன்று ஆக 4 லட்சம் யானைகளே உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1978 இல் அங்கு 15லட்சம் யானைகள் இருந்தன. (எ

## மறைப்பொற்றூணே!

பிள்ளைமனம் ஒன்றேதான் புவியிலென்றும்
பசுமைநெறி தனைவிரிந்து பூக்க வைக்கும்
கொள்ளையின்பம் பெறுவதுநம் குறிக்கோளானால்
குவலயத்தில் பிறரன்புக் கிடந்தா னேது?
முள்ளுறுத்தும் இடர்வழியே மீட்பு என்ற
மாமரியாள் திருமகனின் மறைப்பொற்றூணே!
தெள்ளுதமிழ்ப் பொன்கவியில் திருநீராடும்
தவத்திலுயர் அந்தோனி! தயைக்க ரந்தா!

— பாஷையூர் மு. சிங்கராயர்

[இன்று 11-6-89 பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய எட்டாந் திருவிழா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடைவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை. யாழ்ப்பாணம்.

# உதயன்

11 - 06 - 1989 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## முதலாம் வகுப்பில் இருவர் சித்தி

யாழ். பல்கலைக்கழகம் நடத்திய சித்த மருத்துவ வைத்திய இறுதிப் பரீட்சையில் (1988) திரு எஸ். சிவசண்முகராசா, செல்வி ரீ வசந்தி ஆகியோர் முதலாம் வகுப்பில் சித்தி அடைந்துள்ளனர்.

செல்வி ஏ. பிரேமா, செல்வி எஸ். கலாநாயகி, செல்வி. பி. விக்னவேணி ஆகியோர் இப் பரீட்சையில் சாதாரண வகுப்பில் சித்தி அடைந்துள்ளனர்.

★ திறப்புவிழா அழைப்பிதழ் ★

விநாயகாடேர்ஸ் அலுவலகம் (கிளை)
✶ சங்கர் ஸ்போட்ஸ் & மியூசிக்கல்ஸ் ✶
SHANKAR SPORTS & MUSICALS
(சுன்னாகம் நாகம்ஸ் சினிமாதியேட்டர் காம்பிளக்ஸில் அமைந்துள்ளது)

காலம்: 14 6 89 புதன்கிழமை
காலை 9 10. 30 மணி

தலைவர்:
திரு. A. குமாரகுரு, J.P.U.M
(ADVOCATE)
அ. வி. அருணாசலம், உரிமையாளர்.
[903]

● மனைப்பொருளியல் வகுப்புகளும்
● ஆங்கில வகுப்புகளும்
உலர்வலய அபிவிருத்தி மன்றத்தினால்
நடாத்தப்படவுள்ளன.
வகுப்புகள் ஆரம்பம்: 1989 07-03
விபரங்களுக்கு -
Dryzone Development Foundation
148/1 Stanley Road, (ஸ்ரான்லி வீதி)
Jaffna.
(888)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தங்கராஜா பிறேமதாஷ் [பிராப்]

தாயின் மடியில்: 19-01-1971
ஆண்டவன் அடியில்: 14-03-1989

நீ உனது மக்களை நேசித்தாய்! அதனால் உனது மரணத்தை மறந்தாய்! மரணங்கள் பல வருகின்றன. ஆனால் உனது மரணம் மறக்கக்கூடியதல்ல! கோண்டாவில் மண் ஈன்றெடுத்த அருஞ்செல்வம் நீ.

நீ மண்ணுக்குச் செய்த சேவை சரித்திரம் உள்ள மட்டும் வாழும். உன் தெளிந்த சிந்தனையும் உன் புன்னகைச் சிரிப்பும் என்றும் எம் மனங்களில் நிலைக்கும்.

11-06-1989 இன்று ஞாயிற்றுக்கிழமை இவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
நேசித்தமக்கள், நண்பர்கள்.
கோண்டாவில் வடக்கு.
(11225)

# யாழ். முஸ்லிம் - சென். மேரீஸ் அணிகள்
# இன்று இறுதி ஆட்டத்தில் மோதும்

யாழ்ப்பாணம் ஜூன் 11

மண்டைதீவில் அமரத்துவம் அடைந்த 31 மீனவர்களின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 'ஏ' பிரிவு இறுதிப் போட்டி இன்று ஞாயிறு மாலை 4. 15 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது. இப் போட்டியில் யாழ் முஸ்லிம் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதுகின்றது.

இதற்கு முன்னதாக மாலை 3. 00 மணிக்கு நடைபெறும் காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் இளிநொச்சி தெரிவுக்கோஷ்டியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் மோதும்.

குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் பாடுமீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும் இந்த நொக்கவுட் முறையிலான போட்டியில் வெள்ளியன்று 'ஏ, பிரிவுக்கான அரை இறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆடிய நாவாந்துறை சென் மேரீஸ் விளையாட்டுக் கழகம் 3—1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டநேர இறுதிவரை இரு கழகங்களுமே கோல் எதனையும் பெறவில்லை. எனவே மேலதிக 10 நிமிடம் வழங்கப்பட்டது.

இப் பத்து நிமிடத்திலும் கோல் எதுவும் பெறப்படாததனால் பனல்டி உதை வழங்கப்பட்டது. இதன் மூலம் 3—1 என்ற ரீதியில் சென் மேரிஸ் அணி வெற்றியீட்டியது. (இ-6)

## வலைபந்தாட்டம்: இன்று இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஷப்ரு கிண்ணத்துக்காக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்றதன் மூலம் ஓல்ட் புளூஸ் விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், வைகிங்ஸ் விளையாட்டுக் கழகம், கிறுஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்கள் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத் திடலில் இறுதிப் போட்டிகள் இடம் பெறும். (ஒ-6)

## இன்று வானொலியில்

யாழ்ப்பாணம், ஜூன் 11

கடந்த மாதம்19ஆம் 20ஆம் திகதிகளில் நடைபெற்ற புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் வேஸ்பர்ஸ் திருப்பலி ஆராதனைகளின் தொகுப்பு நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பாகும்:

இத் தொகுப்பு நிகழ்ச்சியை வ. அன்ரனி மரியதாஸ் வழங்குகிறார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தயாரிப்பாளர் திரு. அன்ரனி இராசையா தயாரித்தளிக்கிறார், (க)

## திருத்தலப் பாதயாத்திரை பூர்த்தி விழா இன்று

சுன்னாகம், ஜூன் 11

வலி - கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு திருத்தலப் பாதயாத்திரை பூர்த்தி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் வடக்கு பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில் கோப்பாய் உதவி அரச அதிபர் திரு. க. குலேந்திரா தலைமையில் நடைபெறுகிறது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் ஆலய நிர்வாக சபைச் செயலாளர் திரு. எஸ். துரைராசா வரவேற்புரை நிகழ்த்துவார். தொடக்கவுரையை 'சித்தாந்த ஞானாகரம்' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்துவார்.

சித்தாந்தபானு சிவஸ்ரீ சோ.சுப்பிரமணிய குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார்.

அருள்மொழிஅரசி வித்துவான் ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதன், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் உட்பட பலர் பாராட்டுரை நிகழ்த்துவார்கள்.

திருத்தலப் பாதயாத்திரைக்குத் தலைமை வகித்த ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி நா. முத்தையா இந்த வைபவத்தில் மொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். [இ-27]

## இந்தியப்படை----:-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டப்படும்வரை அமைதிப்படையினர் வாபஸ்பெறக் கூடாது என்ற நிலையை தமிழ், முஸ்லிம்களாகிய நாம் உறுதியாகத் தெரிவிக்கவேண்டும்— என்று கூறப்பட்டுள்ளது. (ஒ)

## பல்கலைக்கழக பிரவேசம்: விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, ஜூன் 11

1989—90 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான விண்ணப்பக் கால எல்லை இம்மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற முடியாது போனவர்கள் இம்மாதம் 19 ஆம் திகதி வரை பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழுக் காரியாலயத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது. (ஒ-எ)

## மரண அறிவித்தல்

### செல்வி மேரி றெஜினா சறேஜினிதேவி மைக்கல்

செல்வி மேரி றெஜினா சறோஜினிதேவி மைக்கல் (யாழ். ஆயுள்வேதக் கல்லூரி மாணவி) காலமாகிவிட்டார்.

இவர் புனித வியாகுல மாதா ஊழியனும், இளங்கலைஞருமான பிரான்சிஸ் துரையப்பா மைக்கல், திருமதி மரிய செபமாலை மைக்கல் ஆகியோரின் ஏக புத்திரியும், 'நெஸ்டா இன்ஸ்ரிரியூட்' உரிமையாளர் அருள்நேசனின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [11-06-89] ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு இளாலி புனித மிக்கேல் தேவாலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் இளாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரான்சிஸ் சென்றேச்.
[விரிவுரையாளர்]
வியாகுல மாதா புனித தலம்,
இளாலி,
எழுதுமட்டுவாள்.
(11230)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை

திருமதி றேசலின் அந்தோனிப்பிள் காலமானார். அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிங்கராசா அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஞானப்பிரகாசத்தினதும் காலஞ்சென்ற நேசரத்தினத்தினதும் சிரேஷ்ட புத்திரியும், செல்வராச, ஜோசப் (Post Master C. M. E), ஜெயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புனிதம், கில்வின் (Electronic's Engineer U. K), பெவிட்டா (France), மெற்றீனா (Canada), சுசி (Switzaland), டொரெக்ஸ், மதி, யூட் (Canada), ரெமி (Canada), ரொசிஸ்டன் (St. Patricks College, Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரெத்தினம் (Managing Director of G. P. N. Construction Co., Ltd.), மனோகரன் (France), மரியநாயகம் (Canada), விஜயரெட்ணம் (Switzaland) ஆகியோரின் அருமை மாமியாரும், நன்சி, நர்கிஷ், சயிலஜா, சஞ்சுதா, அன்ரனி, அனுரியன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
''றேஸ் மஹால்'', அச்சுவேலி.
திரு. S. J. குணரெத்தினம்
[11229]

### திரு. கந்தையா கணபதிப்பிள்ளை

திரு. கந்தையா கணபதிப்பிள்ளை (முன்னாள் ஓய்வு பெற்ற Superintendent of Prisons) அவர்கள் 6-6-89 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார். இவர் காலம் சென்ற திருமதி மகாலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், திரு. க. பொன்னம்பலம் அவர்களின் அன்புச் சகோதரரும், திரு. கனகசபாபதிப்பிள்ளை, காலஞ்சென்ற விசாகப்பெருமாள் (லண்டன்), இராமகிருஷ்ணன் (அரசன்) மலேசியா, ராமேஸ்பரன் (மன்னன்) Ravi Lanka, கொழும்பு, காலஞ்சென்ற ராமையா வேந்தன் ஆகியோரின் மைத்துனரும், திருமதி வேதநாயகி நாகரத்தினம், திருமதி திலகவதி குணரத்தினம் (ஆசிரியை, முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், மல்வானை), திரு. க. சிறிகாந் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், க. நாகரத்தினம் (பொறியியலாளர், Colombo Commercial Company[Engineers]Ltd.), இரத்தினபுரி திரு. குணரத்தினம் ஆகியோரின் மாமனாரும், தயாளினி [இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்], றமேஸ், சுரேஸ் ஆகியோரின் நேசமிகு பாட்டனுமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் திருவடிநிலை, சுழிபுரத்தில் 6-6-89 அன்று நடைபெற்றது: இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்:
க. நாகரத்தினம்
[11219]

### திரு. ஆசீர்வாதம் றேமான்

(இளைப்பாறிய கலால் உத்தியோகத்தர்)

இல: 27, 2 ஆம் குறுக்கு வீதி, குருநகரைச் சேர்ந்த ஆசீர்வாதம் றேமான் 09-06-89 அன்று காலமாகிவிட்டார்.

இவர் செல்வராணியின் அன்புக் கணவரும், காலம் சென்ற ஆசீர்வாதம், மருகிருதா ஆகியோரின் அன்புப் புதல்வனும், காலம் சென்ற அந்தோனிப்பிள்ளையின் அருமைச் சகோதரனும், இம்மக்குளேற்று, கிறிஸ்ரியன் [பிரான்ஸ்], ஜெயரட்ணசிங்கம், லூர்த்துநாயகி, கில்பேட் [சிநோர்], ஒலிவர் [மாநகர சபை], அன்ரனி [கிராமசேவை அலுவலர், குருநகர்], ஜெயசீலி ஸ்ரனிஸ்லோஸ், டயஸ் [பிரான்ஸ்] ஆகியோரது அன்புத் தந்தையும், புஸ்பராணி, கமலா, இராயப்பு [சுவிட்சலாந்து], ராஜேஸ், ராணி, கொன்சி, பீலிக்ஸ் [விளையாட்டுத்துறை அதிகாரி, சங்கானை] ஆகியோரின் அன்பு மாமனாரும், கோல்றிச், ராஜ்குமார், நந்தா, நிமல்டா, ஜெயேந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 11-06-89 (இன்று) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30] மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றே. அன்ரனி.
[மகன்]
குருநகர்.
(11228)



சொலிட் பம்ப்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 193/3 இல் உள்ள அச்சகத்தில் 11—06—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org